OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 01 ஞாயிற்றுக்கிழமை (17 07 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 231

யாழ். தேர்தலை நிறுத்தும் விவகாரம்; ஜனாதிபதி தலையிட்டு உதவ வலியுறுத்து

மனித உரிமைக்குழு கடிதம்

கொழும்பு, ஜூலை 17

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதை நிறுத்தும் விவகாரத்தில், ஜனாதிபதி தலையிட்டு, உயர் நீதிமன்றத்துடன் தொடர்பு கொண்டு உதவ வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைக் குழுவின் செயலாளர் டாக்டர் சூரியா விக்கிரமசிங்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் இதனை வலியுறுத்தியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் சுயேச்சையான தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்பதாலும் —

இது பொதுமக்கள் சம்பந்தப்பட்ட "முக்கியமான விவகாரம்" பிரச்சினை" என்பதாலும் ஜனாதிபதி விஜேதுங்க உயர் நீதிமன்றத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் நடத்தக் கூடாது என்று உத்தரவிடக்கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தது.

மேல் நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்துவிட்டது. அதனைத் தொடர்ந்து கூட்டணியினர் உயர்நீதிமன்றத்துக்கு அப்பீல் செய்திருந்தனர்.

அந்த அப்பீல் மனு நாளை திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது.

இதற்கிடையில், இவ்விவகாரத்தில் உடனடியாகத்தலையிட்டு உயர் நீதிமன்றத்துடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

வியாழன் - வால்வெள்ளி அதிகாலையில் மோதல்

வியாழன் கோளை நோக்கி விரைந்து கொண்டிருந்த "சூமேக்கர் லெவி" வால்நட்சத்திரத்தின் முதல் துண்டம் இன்று அதிகாலை 12.40 மணிக்கு வியாழன் கோளுடன் மோத இருந்தது.

இச்செய்தி அச்சுக்குப் போகும் போது வால்நட்சத்திரம் மோதியது பற்றிய தகவல் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

வியாழன் கோளில் — பூமிக்கு தெரியாத — மறுபுறத்தில் இடம்பெறவிருந்த இந்த மோதலினால் எழும் பிரகாசமான ஒளி வியாழன் கோளைச் சுற்றியுள்ள சந்திரன்களில் பட்டுத் தெறிக்கும் என எதிர் பார்க்கப்பட்டதால் அதனை அவதானிப்பதற்காக உலகின் பல பகுதிகளிலும் வானியல் ஆய்வாளர்கள் சக்திமிகு தொலைகாட்டிகள் சகிதம் தயாராக இருந்தனர்.

வியாழனை நோக்கி விரைந்து கொண்டிருந்த வால்நட்சத்திரத்தின் முதல் துண்டம் சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமும் மூன்று முதல் நான்கு கிலோ மீற்றர் அகலமும் கொண்டதாக இருந்தது. (க-ஐ-4)

மோதலுக்கு முன்னரே கதிரியக்கம் அதிகரிப்பு

வால் வெள்ளி இன்று அதிகாலை வியாழன் கோளுடன் மோதுவதற்கு முன்னரே —

வியாழன் கோளில் இருந்து வெளியாகும் கதிரியக்கத்தின் அளவு பத்து மடங்கு அதிகரித்திருந்தது.

ஜப்பானிய விண்வெளி ஆய்வாளர்கள் இதனைக் கண்டு பிடித்தனர்.

டோக்கியோ பல்கலைக்கழகப் பேராசிரியர் கிரோசோயா தலைமையிலான விண்வெளி ஆய்வாளர்கள் குழு நேற்று முன்தினம் இதனைக் கண்டுபிடித்ததாக ஜப்பானின் என்.எச்.கே. தொலைக்காட்சி நிலையம் அறிவித்தது. (உ-4)

1,30,000 மைல் வேகத்தில் வால் நட்சத்திரம் விரைவு

வியாழன் கோளை நோக்கி சூ மேக்கர் லெவி வால் நட்சத்திரம் மணிக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் மைல் வேகத்தில் விரைந்து கொண்டிருந்ததாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

இந்த வேகத்தில் வியாழக் கிரகத்துடன் அந்த வால் நட்சத்திரம் மோதுவது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய விண்கோள் மோதலாக இருக்கும் என வானியல் அறிஞர்கள் வர்ணித்தனர்.

பூமியைப் போல் ஆயிரம் மடங்கு பருமன் கொண்ட வியாழன் கோள் பூமியிலிருந்து 43 கோடி மைல் தொலைவில் உள்ளது. (உ-ஐ)

மோதல் பற்றிய படங்கள் 2 மணி நேரத்தில் கிடைக்கும்

வியாழன் கோளுடன் வால்வெள்ளி மோதுவதை —

விண்வெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் கலிலியோ விண்கலம் எடுக்கும் படங்கள் இரண்டு மணித்தியாலங்களில் பூமிக்கு வந்து சேரும் என்றும் —

எனினும் அப்படங்கள் பற்றிய ஆய்வை வெளியிட விஞ்ஞானிகளுக்கு இரு மாதங்களுக்கு மேல் பிடிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

தென்னாபிரிக்காவில் வானியல் அறிஞர் கூட்டம்

வியாழன் கோள் மீது "சூ - மேக்கர் லெவி" வால் வெள்ளியின் முதல் துண்டுகள் சில மோதுவதைக் காண்பதற்காக உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த வானியல் அறிஞர்கள் நேற்று முதல் தென்னாபிரிக்காவின் கேப்டவுன் அருகே கரு பாலவனப்பகுதியில் உள்ள ஆய்வு கூடத்தில் திரண்டிருந்தனர்.

அங்கிருந்து தொலை நோக்கிகள் மூலம் வியாழன் கோளில் ஏற்படக்கூடிய மாற்றங்களை கூடியளவு அவதானிக்க முடியும் என்று கருதப்படுகிறது.

ஆறரைக் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப் பூமியில் ஊர்வனவற்றின் சகாப்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த ஒரு கோள் மோதல் போன்று இந்த மோதலும் வியாழனில் ஒரு பிரளயத்தை ஏற்படுத்தும் என்று தென்னாபிரிக்காவில் கூடியுள்ள வானியல் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-ஐ-4)

வியாழனுடன் மோதல் வெள்ளி வரை தொடரும்

வால் நட்சத்திரத்தின் சிதறுண்ட 19 துண்டுகள் வியாழனுடன் மோதவிருந்தன.

இன்று அதிகாலை இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து வால் நட்சத்திரத்தின் ஒவ்வொரு துண்டங்களும் வியாழனுடன் மோதவுள்ளன.

வால் நட்சத்திரத்தின் கடைசித்துண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வியாழனுடன் மோதும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த 19 துண்டங்களில் நான்கு துண்டங்கள் வியாழனுடன் மோதுவதை இந்தியாவில் உள்ள வானியல் ஆய்வு நிலையங்களிலிருந்து தொலை நோக்கிகள் மூலம் பார்க்க முடியும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.

இந்த மோதல்களினால் பூமியில் எந்தவொரு விளைவும் ஏற்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-ஐ)

கண்டி ஐ.தே.க. கூட்டத்துக்கு 35 பஸ்களில் பொதுமக்கள்

முன்னாள் எம்.பி. காதர் கொண்டு வந்து இறக்கினார்

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று கண்டி பொதுச் சந்தை மைதானத்தில் ஆரம்பமாக இருந்த வேளை—

ஜனாதிபதி உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் அங்கு வருவதற்கு சற்று நேரம் முன்பதாக 35 தனியார் பஸ்களில் பொதுமக்கள் கூட்ட மைதானத்துக்குக் கொண்டு வந்து இறக்கிவிடப்பட்டனர் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

நேற்று மாலை 4.15 மணிக்கு உயர் கல்வி அமைச்சர் திரு. அனுரா பண்டாரநாயக்கா கூட்டம் நடைபெற்ற மைதானத்துக்கு வருவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் முன்னாள் எம்பியான ஐ. எம். காதர் பஸ்களில் மக்களை அங்கு கொண்டு வந்து இறக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-ஐ)

எதிரணியினரின் பதாகைகள் கொடிகள் பிடுங்கி வீசப்பட்டன

சுவரொட்டிகளுக்கு தார்ப்பூச்சு

கொழும்பு, ஜூலை 17

ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று கண்டியில் நடைபெறுவதற்கு முன்னர் கண்டி மாநகரில் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவித்து கட்டப்பட்டிருந்த கொடிகள் பதாதைகள் என்பன பிடுங்கி எறியப்பட்டதாகவும், வீதிகளில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளுக்கு தார் பூசப்பட்டதாகவும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பொலீஸ் அதிரடிப் படையினர் உதவி செய்து வருவதாகவும் அவர் வெரித்தாஸ் சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார். (இ-ஐ-6)

மக்கள் நாட்டம் குறைவு

கட்சித் தொண்டரே அதிகம்

2,000 பொலீஸார் வரை நேற்று காவல் கடமையில்

கொழும்பு, ஜூலை 17

கண்டியில் நேற்று நடைபெற்ற ஐ.தே.க. கூட்டத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகள் அப்பகுதியில் பலப்படுத்தப்பட்டிருந்தன. 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலீஸார் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் அநேகமானோர் கட்சித் தொண்டர்கள் என்றும் உள்ளூர் மக்கள் நேற்றைய கூட்டத்தில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை என்று அங்கு சென்றிருந்த பி.பி.ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா தலைமை வகித்தார்.

அமைச்சர்களான தொண்டமான், காமினி திஸநாயக்கா ஆகியோர் உட்படப் பலர் அங்கு உரையாற்றினர்.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவைத் தவிர அங்கு உரையாற்றிய அனைவரும் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை தனிப்பட்ட முறையில் தாக்குவதையே தமது பேச்சின் பிரதான கருப்பொருளாகக் கையாண்டனர் என்று செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

தேர்தல்கால வன்முறைகள்; நிறுத்துவதற்கு ரணில் முயற்சி

அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்திப்பார்

ஆகஸ்ட் 16 ஆம் திகதி நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பும் தேர்தல் முடிந்த பின்பும் வன்செயல்கள் இடம்பெறாமல் [illegible] எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து—

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் [illegible] கலந்தாலோசிக்க இருக்கிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுடன் தாம் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திகதியை பிரதமர் விரைவில் அறிவிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

இன்று விசேட படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 17

பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க இன்று வழமையான நேரத்தில் கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இடம்பெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ)

கோட்டைப் பகுதியில் கண்டெடுத்த பொருள்

சிறுவனின் உயிரைப் பறித்தது

யாழ்ப்பாணம், ஜூலை 17

அனாதரவாகக் கிடந்த உருண்டையான பொருள் ஒன்று வெடித்ததில் 15 வயதுச் சிறுவன் ஒருவர் மரணமானார். மற்றும் ஒருவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 10 00 மணி அளவில் யாழ்ப்பாணம் கோட்டைப்பகுதியில் இடம் பெற்றது.

வேலணை மேற்கு செம்மண்காடு பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதி சிவன் பண்ணை வீதியில் வசித்துவந்த இரத்தினசிங்கம் திசைநாதன் என்பவரே மரணமானவர் ஆவார். காயம் அடைந்தவர் இவரது சகோதரரான இரத்தினசிங்கம் சஜேந்திரன் (வயது8) காலஞ்சென்ற இரத்தினசிங்கம் திசைநாதன் பிறந்த

(6ஆம் பக்கம் பார்க்க)

நல்லூரில் கம்பன்விழா 5 நாள் நடைபெறும்

புதன் கிழமை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 17

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழா எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமை நல்லூரில் ஆரம்பமாகவுள்ளது. 24 ஆம் திகதி ஞாயிறு வரை விழா தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நடைபெறும்.

விழா நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் விசேட பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது.

முதல் நாள் நிகழ்ச்சி பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும், ஏனைய நான்கு நாள் நிகழ்ச்சிகளும் காலை 9.30 மணிமுதல் ஆரம்பமாகும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆட்சி மாற்றத்துக்கு 70 சதவீதமானோர் ஆதரவு

கொழும்பு, ஜூலை 17

நடைபெறவிருக்கும் தேர்தல் தொடர்பாக இராணுவ புலனாய்வுப் பிரிவு நடத்திய கணிப்பீடு ஒன்றின் படி 70 சதவீதமான வாக்காளர்கள் தற்போதைய ஆட்சியில் மாற்றத்தை விரும்புகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கணிப்பீட்டின் படி சுமார் 60 சதவீதமான வாக்காளர்கள் ஊழல் தொடர்பாக கவனம் செலுத்துகின்றனர் என்றும் —

80 சதவீதமானவர்கள் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என விரும்புகின்றனர் எனவும் — தெரிய வந்துள்ளது.

இத்தகவலை ராவய பத்திரிகை ஆசிரியர் திரு. விக்டர் ஐவன் பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார். (இ-ஐ-6)

முச்சந்தி முனி



வால் வெள்ளி கொண்டு மோதினாலும் தெற்கின் இனவாதத்தைத் தோற்கடிக்க முடியுமோ தெரியாது பாருங்கோ.........!

எதிரணியின் முதலாவது பிரசாரக் கூட்டம்

நித்தம்புவையில் இன்று

கொழும்பு, ஜூலை 17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது தேர்தல் பிரசாரத்தை இன்று ஆரம்பிக்கவுள்ளது. ஹொரகொல்லையில் உள்ள பண்டாரநாயக்கா சமாதியின் முன்னால் அனைத்து வேட்பாளர்களும் கூடி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணியின் பொதுக் கூட்டம் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தலைமையில் நித்தம்புவையில் நடைபெறவுள்ளது. (இ-ஐ 6)

குழப்பம் விளைவிப்போரை கைது செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, ஜூலை 17

வன்செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து விழிப்பாக இருந்து அவர்களைக் கைது செய்யுமாறு பொலீஸ் மா அதிபர் பிராங் டி. சில்வா அனைத்து பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

'திவயின' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட தினமன்று நடந்த வன்செயல்களுக்குப் பின்னணியில் இருந்தவர்களைக் கண்டு பிடிக்க விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-ஐ-6)

20 ஆவது பிறந்ததின வாழ்த்து

கார்த்திகேசு செந்தில்குமார்

இன்று (17-07-94) தனது 20 ஆவது பிறந்த தினத்தை நாட்டுப்பற்றுடனும், [illegible] ஆசியுடனும் கொண்டாடு— சா. செந்திற்குமாரை பல கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நல்லூர் கந்தனின் துணையுடன் வாழ்கவென ஐயா, அம்மா, அக்காமார், அண்ணாமார், தம்பிமார், தங்கை, அத்தான், அண்ணி, மருமக்கள், நெறாமகள் மற்றும் உறவினர்கள் வாழ்த்துகிறார்கள்.

மணிப்புரி,
கொழும்புத்துறை.

(31947)

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

சமூகசேவகர்கள் தேவை

எமது செயற் திட்டங்களில் பங்குகொண்டு எம்முடன் இணைந்து செயற்பட தொண்டர் அடிப்படையில் சமூக சேவகர்கள் பகுதிநேர-முழுநேர அங்கத்தவர்கள் தேவைப்படுகின்றனர்.

சமூகசேவையில் நாட்டமுள்ள தொண்டர்கள் எமது நடுவப்பணியகத்தில் அல்லது அருகிலுள்ள எமது பிரிவுச் செயலகங்களில் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவுச் செயலகங்கள்

1.. காங்கேசன் துறைசாலை, சுன்னாகம்.
2. மந்திகை, பருத்தித்துறை.
3. நாகர் கோயில்
4. கண்டிசாலை, மீசாலை
5. கண்டிசாலை, பளை
6. பண்டிதர் குடியிருப்பு, கெற்பேலி.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
நடுவப்பணியகம்,
83/2, காங்கேசன்துறை சாலை,
கொக்குவில்.

(31921)

நன்றி நவிலல்

மகளிர் மகா வித்தியாலயம்

சாவகச்சேரி

15-7-94வெள்ளிக்கிழமையன்று நடைபெற்றஎமது பாடசாலை கலைவிழா சிறப்புற,நிறைவேற நிதிஆதரவு வழங்கியோருக்கும். நிதி நாட்ட முன்நின்ற பெற்றோர், பழைய மாணவர். நலன்விரும்பிகட்கும், விழா, ஒழுங்கமைப்புக்கு உதவியோருக்கும் இசைநடன ஆசிரியர்கட்கும் மாணவகுழுக்களுக்கும் பக்கவாத்தியம் இசைத்தவர்கட்கும், பத்திரிகையில் விளம்பரம் செய்ய உதவியவர்கட்கும் அச்சுவேலைகளை அன்பளிப்பு செய்தோருக்கும், ஒலி ஒளி வழங்கியோருக்கும், ஒத்துழைப்பு வழங்கிய தென்மராட்சிக் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும், விழாவிற்கு அனுமதி வழங்கியும் பாதுகாப்பு வழங்கியும் உதவியவர்கட்கும் உதவி வழங்கிய ஏனைய பொது ஸ்தாபனங்கட்கும் மகிழ்வுடன் நன்றி கூறுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை
மகளிர் மகா வித்தியாலயம்,
சாவகச்சேரி,

(31966)

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

செல்வன் தர்மதுரை அசோக்குமார்

தோற்றம்:
17-11-1967

மறைவு:
14-07-1990

திதி: 17-07-1994

ஆண்டு நான்கு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
மின்னாமல் முழங்காமல் விழுந்ததே
இடி எம் மேல்
தீராத நோயென்று வாடவில்லை
முதுமை உன்னை அடையவில்லை.
இளம் வயதில் சடுதியாக
நீ மறைந்தது விதியா? சதியா?
அசோக்கே! எம் மகனே!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும்.

குடும்பத்தினர்,

லீலா வாசம்,
முள்ளானை,
இளவாலை.

(31965)

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையினர் வருடாந்தம் நடத்தும் ஆண்களுக்கான 35 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று காலை 6 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி முன்றிலில் ஆரம்பமாகும் யாழ். பல்கலைக்கழக முன்றிலில் போட்டி முடிவடையவுள்ளது. (உ-20)

* * *

''டொனால்ட் கணேஷ்குமார்'' வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வருடம் தோறும் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 9 மணிமுதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதும்.

மருதனார்மடம் இறையியல் கல்லூரி அதிபர் வண. டி. எஸ். தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். தென்னிந்திய திருச்சபையின் மறைவியல் கல்வி இயக்குநர் திருமதி தயாளினி தியாகராஜா வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை வழங்குவார். (உ-20)

* * *

புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி திருவாளர்கள் பொ. தர்மு, வை. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் ஞாபகார்த்தமாக கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் -- இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் மோதும் அணிகள் வருமாறு:-

★ தொண்டமனாறு விவேகானந்தா வி.க. எதிர் சிறுப்பிட்டி ஜனசக்தி வி.க.

★ வண்ணார்பண்ணை வள்ளுவன் வி.க எதிர் இமையாணன் கலைமகள் வி.க.

★ ஆவரங்கால்மத்திய வி.க எதிர் திலகம் காந்திஜீ வி.க.

★ உடுப்பிட்டி குணசேகரா வி.க, எதிர் சுன்னாகம் சென்மேரீஸ் வி.க. (ஒ)

* * *

நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தும் ''பாரதி'' கேடயத்துக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி(செற்அப்)யில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய வி. க. அணியை எதிர்த்து மோகனதாஸ் வி. கழக 'பி' அணி மோதும். (ஐ)

இ.தொ.கா. ஆதரவுடன் மட்டுமே ஐ.தே.க. ஆட்சி அமைக்க முடியும்

அத்தகைய நிலையை ஏற்படுத்த தொண்டா அழைப்பு

கொழும்பு, ஜூலை 17 இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவுடன் மட்டுமே இந்த நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியினால் அரசை அமைக்க முடியும் என்பதை மலையகத் தமிழர் உணர வைக்கவேண்டும்.

அமைச்சர் தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு கட்சியில் இருந்து 113 எம். பிக்கள் தெரிவு செய்யப்பட்டால் அக்கட்சியினால் அரசாங்கம் அமைக்க முடியும். அந்த 113 பேரில் 13 பேர் மலையகத்தைச் சேர்ந்த தமிழர்களாக இருப்பின் அது பெரும் வெற்றியாகும், நாம் கூறுவதை கட்டாயமாக அரசாங்கம் செய்யும் நிலை ஏற்படும்'' — இவ்வாறு தொண்டமான் மேலும் கூறினார்.

நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த இ. தொ. கா. பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையிலேயே தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்தார். (உ-எ)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17 பருத்தித்துறை கோட்டத்திற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என்று அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர் சம்பந்தப்பட்டவர்களை தவறாது சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

* * *

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

இசையாராதனை

யாழ்ப்பாணம் ஜூலை17 ஸ்ரீராகவேந்திரா சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனத்தின் இசையாராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 30மணிக்கு நல்லூர்கோயில் வீதியில் நடைபெறும்

இதில் வைத்திய கலாநிதி தி. செங்காதரனின் புல்லாங்குழல் இசையாராதனை இடம் பெறும். வயலின் — சங்கீதபூஷணம் கி. கே. குமாரசாமி, மிருதங்கம் — வித்துவான், எம். மகேந்திரன், (ஒ-4-111)

இரண்டாம் தவணைப் பரீட்சை

வலிகாமம் தெற்கு ஜூலை 17 இரண்டாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடங்கி 27 ஆம் திகதிவரை பாடசாலைகளில் நடைபெற உள்ளன.

முதலாம் தவணையைப் போன்று இரண்டாம்தவணை பரீட்சையும் அவ்வப் பாடசாலை மட்டத்திலேயே நடைபெற உள்ளன.

மேலும். ஆண்டு 6 முதல் 11 வரையான மாணவர்களுக்குரிய பொது அறிவு பரீட்சை ஜூலை 20 ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் நடைபெறுமெனவும் —

எல்லாமாணவரும் இப்பரீட்சைக்கு தோற்றுவதுடன், புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் பதிவு செய்து வழங்க வேண்டுமெனவும் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஓ-152)

இணுவிலில் இலவச கண் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 17 யாழ். றோட்டறிக் கழகம் வசதி குறைந்த மக்களுக்காக நடத்தும் இலவச கண் சத்திர சிகிச்சை முகாமின் மூன்றாவது நிகழ்வு இணுவிலில் உள்ள மக்லியொட் ஆஸ்பத்திரியில் இன்று ஞாயிறு காலை 7 - 30 மணி முதல் நடைபெறவுள்ளது.

''சற்றம்,, உள்ளவர்கள் இன்று அங்கு சமூகமளித்து ஆரம்ப பரிசோதனையை செய்து கொள்ளலாம். (ஐ)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம். ஜூலை 17 வலிமேற்கு உதைப்பந்தாட்டச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு இன்று ஆரம்பமாக இருந்த — கழகங்களுக்கு இடையிலான — உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக சங்கத் தலைவர் திரு.எம் பத்மநாதன் அறிவித்துள்ளார். (உ-20)

சுமார் 15 ஆயிரம் பேர் நடவடிக்கை

தொழில்நுட்பவியலாளர்கள் நாளை வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூலை 17 நடுத்தர தொழில் நுட்ப சேவையில் உள்ள சுமார் பதினையாயிரம் தொழில் நுட்பவியலாளர்கள் நாளை அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள விருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொழில் நுட்பத் துறையில் உள்ள தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு இந்த வேலை நிறுத்தத்தை ஒழுங்கு செய்துள்ளது.

1977 இல் அமைக்கப்பட்ட நடுத்தர தொழில் நுட்ப சேவையைத் தொடர்ந்து அச்சேவையைச் சேர்ந்த தொழில் நுட்பவியலாளர்களின் சம்பளங்களில் நிலவும் முரண்பாடுகளை அகற்றும்படி கூட்டமைப்பு கோரி வந்தது.

இதற்கிணங்க, அரசாங்கம் 1991 இல் சம்பள மீளாய்வுக் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு 17. 3 1993 இல் அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. ஒரு வருடம் கழிந்ததும் அந்த அறிக்கையை அமுல் செய்வது பற்றி அரசு அக்கறை செலுத்தாமல் இருப்பதற்கு அதிருப்தி தெரிவிக்கு முகமாகவே இந்த அடையாள வேலை நிறுத்தம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

திருப்பதிக்கு 3 மாத வருமானம் ரூ 25 கோடி

சென்னை. ஜூலை 17 திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு கடந்த மூன்று மாதங்களில் இந்தியப் பணத்தில் 25 கோடியே 40லட்சத்து 87ஆயிரத்து 926ரூபா வருமானமாகக் கிடைத்துள்ளது

இது கடந்த ஆண்டு இக்காலத்தில் கிடைத்த வருமானத்தை விட நாலரைக் கோடி ரூபா அதிகமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 17 மக்கள் நலன்புரி சங்க முதலுதவிப் பிரிவின் தொண்டர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 00 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

175 ஆம் ஆண்டு நிறைவு விழா காணும் யாழ். மத்திய கல்லூரி

யாழ்ப்பாண மண்ணில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கல்விக் கூடங்களில் யாழ். மத்திய கல்லூரியும் ஒன்றாகும். 1816 - 08 - 01 இல் ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரி 175 ஆண்டுகளை நிறைவு செய்து வெற்றிநடை போடுகின்றது.

எமது கல்லூரி எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதனைக் கண்டறிவதற்காக பழைய மாணவர் சங்கத்தினால் ஒரு ஆய்வுக் குழு நியமிக்கப்பட்டது. மாவட்ட நீதிபதி திரு. கே. சுதிரவேற்பிள்ளையின் தலைமையில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சிற்றம்பலம், யாழ். மெதடிஸ்த திருச்சபை பிரதிநிதி வணக்கத்திற்குரிய ஏ. டபிள்யூ ஜெபநேசன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அவர்கள் கல்லூரி சம்பந்தப்பட்ட பல ஆவணங்களையும் வரலாறுகளையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து கல்லூரி 1816 - 08 - 01 இல் ஆரம்பிக்கப்பட்டது என்பதனை ஐயம் திரிபுற வியம்பியிருக்கிறார்கள். அன்றிலிருந்து எமது கல்லூரி இந்த மண்ணிற்கும், தமிழ் மக்களுக்கும் உலகிற்கும் பல பெரியார்களையும், பேராசான்களையும், வைத்திய நிபுணர்களையும் வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், ஆசிரியர்களையும், கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும், வியாபார நிபுணர்களையும், பத்திரிகையாளர்களையும் உருவாக்கித் தந்திருக்கின்றது.

இவற்றில் தனித்துவமானதும் முதன்மையானதுமான பங்களிப்பை எமது சமூகத்திற்குநல்கிய யாழ். மத்திய கல்லூரிக்கே உரித்தான பதின்மரைக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

★ எமது கல்லூரியை 01- 08- 1816 இல் ஓர் ஆங்கில பாடசாலையாக ஆரம்பித்தவர் வண. ஜேம்ஸ்லிஞ்ச்,

★ ஆங்கில பாடசாலையை யாழ். மத்திய பாடசாலையாகத் தரமுயர்த்தியவர் வண. டாக்டர் பேர்சிவல்.

★ எமது பழைய மாணவரும் ஆசிரியருமானவர் சைவத் தமிழறிஞர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

★ யாழ்ப்பாணத்தில் துடுப்பெடுத்தாட்டத்தை (Cricket) முதன் முதலில் அறிமுகப்படுத்தியது எமது கல்லூரியே அறிமுகப்படுத்தியவர் அதிபர் பிறட்றிக் வெப்ஸ்ரர்.

★ யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டத்தை முதன் முதல் அறிமுகப்படுத்தியதும் எமது கல்லூரியே. அறிமுகப்படுத்தியவர் அதிபர் சேப்ரியன் லீஸ்.

★ உலகத் திருச்சபையில் உன்னத இடத்தை வகித்த முத்தமிழர் எமது பழைய மாணவர் – ஆசிரியர் அதிபர் வண. டாக்டர் டி. ரி. நைல்ஸ்.

★ இந்த நாட்டில் ஆசிரியத் தொழில் உயர்ச்சி பெறுவதற்குத் தொழிற்சங்க ரீதியில் உழைத்தவர் எமது பழைய மாணவர்– ஆசிரியர்– அதிபர் ஏ. ஈ. தம்பர் ஆவார்.

★ கலைத்துறைத் துவத்தில் புலமை மிக்கவரும் தமிழில் [illegible] மாணவர் எமது [illegible] குமான கலைப்புலவர் க. நவரெத்தினம்.

★ யாழ்ப்பாணத்திலே சேக்ஸ்பியர் நாடக அரசியல் வல்லுநராய்த் திகழ்ந்தவர் எமது பழைய மாணவர் ஆசிரியர் - உபஅதிபர்- பதில்அதிபர் ஜே. சி. சார்ள்ஸ்.

★ இலங்கையின் போட்டியாளராக 1952 ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய முதலாவது மாணவரும் ஒரேயொரு தமிழ்மாணவரும் எமது கல்லூரி மாணவரான என். எதிர்வீரசிங்கம்.

இதேபோன்று இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசத்தில் இப்போது கடமை புரிகின்ற சில மதிப்பு மணிகளையும் குறிப்பிடலாம். யாழ். போதனா வைத்திய சாலையில் கடமை புரியும் பொது வைத்திய நிபுணர் டாக்டர். எஸ். சிவகுமாரன், கண்சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன், யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வி. நவரட்ணராஜா, அரச அதிபர் கா. மாணிக்கவாசகர், கல்லூரியின் அதிபர் கவிஞர் என். கே. சண்முகநாதபிள்ளை ஆகியோரும் எமது கல்லூரியின் தலைசிறந்த மைந்தர்களுக்கு சில உதாரணங்கள்.

இந்தக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை எமது பழைய மாணவர் சங்கம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எமது கல்லூரியில் [illegible] ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

டாக்டர். எஸ்.பி ஆர். சிர்மாறன்
(தலைவர் பழைய மாணவர் சங்கம்)
(யாழ் மத்திய கல்லூரி)

★

தென்னையின் பாகங்கள் யாவுமே மருந்துகள் தான்

தென்னை மரம் பூலோக கற்பக விருட்சமாக கருதப்படுகிறது. தமிழர்களின் வாழ்வோடு ஒன்றாக கலந்துள்ளது தெங்கு ஆகும். இந்த மரம் எமது மண்ணுக்கு சொந்தமானது. தெங்கு, தென்வன தென்னம்பிள்ளை, தென் நாளிகேரம், தாழை, இலாங்கலி, புல்மரம் எனப் பல வேறு பெயர்கள் உண்டு. இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றது. இந்தியா, பர்மா, வங்காளம், மலையாளம் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது. பிள்ளைகளை வளர்ப்பது போல தமிழர் தென்னைகளை வளர்ப்பதனாலேயே தென்னம்பிள்ளை என்ற பெயர் வரலாயிற்று, தென்னை தனியாக தோட்டங்களாக பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகிறது

வைத்தியம்

இதன் எல்லா உறுப்புகளும் பயன் தருவதாலேயே பூலோக கற்பக விருட்சம் என்ற பெயர் வந்தது.

தென்னம்பாளையை சீவி கள்ளெடுக்கலாம், சூரியன் உதயம் ஆவதற்கு முன் இறக்கப்பட்ட இனிப்புள்ள கள்ளில் சிறிதளவு சீரகம், ஏலம் கற்கண்டு கலந்து விடியற்காலையில் குடித்துவர கறுகறுப்பும் தேக பூரிப்பும் தேக குளிர்ச்சியும் உண்டாகும். கள்ளில் இருந்து சாடி, சாடி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

தென்னை மரவேர் சிறு துண்டுகளாக நறுக்கி நாறு கிராம் எடுத்து நானூறு மில்லி லீற்றர் நீர் விட்டு இருநூறு மில்லி லீற்றராக வற்றவைத்து தினமும் இருவேளை குடித்துவர கெற்ப வாயுக்குத்து முதலிய ரோகங்கள் நீங்கி கருப்பை சுத்தமாகும்; மகோதரம் பாண்டு, அடிவயிற்று நோ குட்டு வாயு தீரும்.

தென்னம்பூ, நீற்றுக்காய் நெய், வைபாந்தாரை வேகியம் நீற்றுக்காய் வேகியம், தென்னம் பாளை வேகியம், ஆகிய மருந்துகள் இதன் சாற்றில் இருந்து தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாடு, வெள்ளை, எலும்புருக்கி இறுநீர் கடுப்பு, காமாலை, இரணி பசியின்மை, உள்வெப்பு, பித்தபாண்டு தீரும். தென்னங்குரும்பை உயர் வயிற்றுப் போக்கு, இரத்தப் போக்கு மாந்தம் போக்கும்.

முற்றிய தென்னையின் பட்டையை வெட்டி உலர்த்தி தூளாக்கி 50g தூளை 150 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தோல் நோய்களுக்கு பூசலாம் தேமல்களுக்கும், சொறி தோலில் ஏற்படும் வெடிப்புக்கும் சில நாட்கள் பூசி வர நீங்கும்.

மூலத்தால் இரத்தம் போவதைத் நிறுத்தவும் உடல் சூட்டை தணிக்கவும் மார்பில் உள்ள சளியை வெளியேற்றவும் தென்னம் குருத்தை உண்டு வர வேண்டும்.

தென்னம் மட்டைச்சாறு அருந்தி வர வயிற்றுக் கடுப்பு மலவாசல், இறுநீர்கடுப்பு அதிமூத்திரம் கட்டுப்படும்; சில விடக்கடிகளுக்கு இந்த சாறு குடிநீராக பயன்படுகின்றது.

தேங்காய் எண்ணெய் புண்களையும் தோல் நோய்களையும் நீக்குகிறது. தலைமயிரை நன்றாக வளரச் செய்கின்றது.

தென்னம் சாராயம் வயிற்று நோ, குடல் நோ, அடிகாயம் முறிவு, நெரிவு போன்ற நோய்களில் மருந்தாக பயன்படுகின்றது.

இளநீர் உடற்சூட்டை தணித்து குளிர்ச்சியை கொடுக்கின்றது அழற்சியை ஆற்றுகின்றது. சிறுநீரை வெளியேற்றுகிறது. களை, சோர்வு, தாகம், உடற்றளர்ச்சி சளரிவு கண்ணோய் தலைநோய், வாய் அவியல் நீங்கும், இத்தகைய மருத்துவ பயன்பாடு மிகுந்த தென்னை மரத்தைப் பேணி வளர்ப்பது நம் எல்லோருடைய கடமையுமாகும்.

தேங்காய்ப் பால் வாய் அவியல், குடல் அவியல், வேக்காடு இவற்றைநீக்கும் வெளிப் பாவிப்பில் வியற்குரு, தோல் வியாதிகள் நீங்கும். மாங்காய்ப் பாலை முறிக்கும்.

சிரட்டை தோல்ரோகங்கள் தோலின் நிறம் மாற்றங்கள் இவற்றை எண்ணெய் இறக்கி பாவிக்கும் பொழுது நீக்குகிறது.

சிரட்டைக் கரி குடலில் ஏற்படும் எண்ணெய் சிக்கை நீக்கும்.

தென்னை ஓலையை தலையிடிக்கு சுற்றிக் கட்டினால் நீங்கும்.

பொச்சுமட்டை சிலந்திக் கடிக்கு சாறு பிழிந்து கொடுப்பர், நெருப்பில் வாட்டி ஒத்தணம் கொடுப்பர்.

[நன்றி: சித்தமருத்துவ ஆண்டிதழ் மருந்து]

— க. பிரேமலதா —

★

வடகொரிய புதிய ஆட்சித் தலைவர் கிம் யொங் - இல்
45 வருடகால நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பாரா?

சமாதானப் பேச்சு ஆரம்பமான சமயம் மரணத்தை தழுவிக்கொண்ட கிம் இல் -சுங்

வடகொரிய ஜனாதிபதி கிம் இல்-சுங் (Kim Il-Sung) இம் மாதம் 8ஆம் திகதி மாரடைப்புக் காரணமாக திடீரென மரணமானார்.

இதனை தொடர்ந்து, வட கொரியாவின் அணு சக்தி ஆலைப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் குழப்ப நிலையை அடைந்துள்ளன.

கிம் இல் — சுங் மரணம் காரணமாக ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வந்த அமெரிக்க — வட கொரிய அமைச்சர்கள் மட்ட பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இம் மாதம் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை தென்கொரியாவின் தலைநகரான சோலில் நடைபெற இருந்த சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உச்சிமாநாடும் காலவரையறை இன்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மரணமாகி உள்ள வட கொரிய ஜனாதிபதி கிம் இல் — சுங்கும் தென்கொரிய ஜனாதிபதி கிம் யொங் சாமும் (Kim Young Sam) இந்த உச்சிப் பேச்சுகளில் கலந்து கொள்ள இருந்தனர்.

1950 — 53 கொரிய யுத்தத்தின் பின்னர் இரு கொரியாக்களின் தலைவர்களும் சந்திக்கவிருந்த முதலாவது மாநாடாக இது கருதப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட அமெரிக்க — வடகொரிய ஜெனிவாப் பேச்சுகளும்— வட—தென்கொரியத் தலைவர்களுக்கிடையிலான சோல் உச்சி பேச்சுக்களும் — விரைவில் நடைபெறும் என வட கொரிய அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆரம்பத்திலேயே பேச்சுக்களில் தடங்கல் ஏற்பட்டது துரதிஷ்டமே.

வெளி உலகம்

வடகொரியாவின் அணுசக்தி ஆலை விவகாரம் தொடர்பாக கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டிருந்த பெரும் நெருக்கடி நிலை தணிந்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகவிருந்த சமயம் கிம் இல் — சுங்கின் மரணம் ஏற்பட்டிருக்கிறது.

45 வருட காலம் ஆட்சியில்

உலக நாடுகளில் நீண்ட காலம் பதவியில் இருந்து வந்த— இருந்து வரும் தலைவர்களில் கிம் இல் — சுங்கும் ஒருவர்.

ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன், கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ, ஆபிரிக்காவில் உள்ள ஸயர் (முன்னாள் கொங்கோ) ஜனாதிபதி மொபுட்டு இந்த வரிசையில் தற்போது இடம்பெற்றுள்ளனர்.

கொங்கோவில் 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அதிகாரப் போராட்டம் முடிவில் ஆட்சியைக் கைப்பற்றியவர் மொபுட்டு.

1948ஆம் ஆண்டு முதல் வட கொரியாவின் ஜனாதிபதியாக இருந்து வந்த கிம் இல்-சுங்கின் (82 வயது) இடத்துக்கு அவரது மூத்த மகன் கிம் யொங் இல் (Kim Yong-Il) தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

கிம் யொங் — இல் கிம் இல் — சுங்கின் வாரிசாகக் கருதப்பட்டு வந்தவர். கடந்த இருபது வருடகாலமாக அரசியலில் ஈடுபட்டு வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிம் யொங் — இல்லின் நியமனம் மூலம், கம்யூனிஸ்ட் நாடு ஒன்றில் முதல் தடவையாக குடும்ப ஆட்சிக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. 1976ஆம் ஆண்டில் மாஸே — துங்கின் மரணத்துக்குப் பின்னர் சீனாவில் மாவோ துங்கின் மனைவியார் தலைமையிலான நால்வர் குழு ஒன்றினால் (Gang of Four) ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. சீனா தொடர்ந்து வடகொரியாவின் நட்பு நாடாக இன்னும் இருந்து வருகிறது.

கிம் யொங் - இல் பலம் வாய்ந்தவரா?

வடகொரிய அணு சக்தி ஆலை பிரச்சினை தொடர்பாக கிம் இல் — சுங் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி கார்ட்டருக்கு அளித்த உறுதி மொழிகளை புதிதாக ஆட்சிக்கு வரும் அவரது மகனான கிம் யொங் — இல் எவ்வளவு தூரம் நிறைவேற்றுவார் என்பதே இன்றுள்ள பிரதான கேள்வி ஆகும்.

1979ஆம் ஆண்டு எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் செய்து வைத்தது மூலம் கார்ட்டர் சர்வதேசப் புகழ் பெற்றிருந்தார்.

ஆயுத்துல்லா கொம்மேனி தலைமையிலான ஈரானிய புரட்சியை அடுத்து 1979இல் இடம்பெற்ற அமெரிக்கத் தூதரக முற்றுகையை உடைக்க அவர் கையாண்ட முறைகள் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தோல்வியைத் தழுவ பிரதான காரணமாக அமைந்தன எனலாம்.

கார்ட்டரின் சமாதானத் தூது

வடகொரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை (Sanction) கொண்டு வரவிருந்த சமயம் கொரிய தீபகற்பத்தில் பெரும் நெருக்கடி உருவானது. அப்போது ஜிம்மி கார்ட்டர் வடகொரியாவுக்கும் தென் கொரியாவுக்கும் தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு நெருக்கடி தணிவதற்கு உதவினார்.

ஜிம்மி கார்ட்டர் — கிம் இல் — சுங் சந்திப்பின்போதே ஜெனிவாவில் அமெரிக்க — வடகொரிய அமைச்சர்கள் மட்டப் பேச்சுக்களை நடத்தவும், சோலில் வடகொரிய— தென் கொரியத் தலைவர்கள் சந்திக்கவும் இணக்கம் காணப்பட்டது.

பிரச்சினைக்குரிய தனது அணுசக்தி ஆலைத் திட்டங்களை நிறுத்தி வைக்கவும் —

சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் உறுப்பினர்கள் வட கொரியாவில் தொடர்ந்து தங்கியிருக்கவும் —

அணுசக்தி ஆலைகளைப் பரிசோதிக்கும் கருவிகளை அவர்கள் வட கொரியாவில் தொடர்ந்து வைத்திருக்கவும் கிம் இல் - சுங் இணங்கி இருந்தார்.

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமாகச் செயற்பட்டு வருகிறது. இதன் தலைமையகம் ஆஸ்திரேலியத் தலைநகரான வியன்னாவில் (Vienna) இயங்கி வருகிறது.

(Nuclear Non Proliferation Treaty) என அழைக்கப்படும் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட 160 நாடுகள் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியுடனான ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டுள்ளன.

1970 இல் செய்து கொள்ளப்பட்ட அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம், உலக நாடுகள் புதிதாக அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதைத் தடுக்கிறது

ஒப்பந்தத்தை மீறி அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகளைக் கண்டு பிடிக்கும் பணியில் சர்வதேச அணு சக்தி ஏஜென்சி ஈடுபட்டு வருகிறது.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகப் போவதாகவும் —

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி உறுப்பினர்கள் தனது அணு ஆலைகளைப் பார்வையிட அனுமதிக்கப் போவதில்லை என்றும் வட கொரியா அறிவித்ததை அடுத்தே கொரியா தீபகற்பத்தில் பதற்ற நிலை ஆரம்பமானது.

வடகொரியா முதலாவது பரீட்சைக்களம்

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பல நாடுகள் தற்போது ரகசியமாக அணு குண்டுகளை உற்பத்தி செய்கின்றன என்று அமெரிக்கா கருதுகிறது.

1990 வளைகுடா யுத்தத்தின்போது ஈராக்கின் பெரும்பாலான அணுசக்தி ஆலைகள் அழிக்கப்பட்டுவிட்டன. ஈராக்கின் அணுசக்தி ஆலைப் பிரச்சினைக்கு அமெரிக்கா ஓரளவு தீர்வு கண்டு விட்டது. எனினும் ஈராக் மீண்டும் ஒப்பந்தத்தை மீறி அணு ஆயுத உற்பத்தியில் தற்போது ஈடுபட ஆரம்பித்திருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளும் அணு ஆயுதங்களை தயாரிப்பதாக நம்பப்ப கிறது. வடகொரிய அணுசக்தி ஆலைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டு விட்டால் அமெரிக்காவின் அடுத்த இலக்கு பாகிஸ்தானாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது.

ஆனால் அமெரிக்காவின் முதலாவது பரீட்சைக்களம் வட கொரியாதான். வட கொரியாவை வழிக்குக் கொண்டு வந்து விட்டால், ஒப்பந்தத்தை மீறும் மற்றைய சிறியநாடுகளும் வழிக்கு வந்துவிடும் என்று அமெரிக்கா கருதுகிறது.

நிலைமை மோசம் அடைந்திருக்கும்

வட கொரியா மீது அமெரிக்கா தடைகளைக் கொண்டு வந்திருந்தால் வட கொரியா தென் கொரியா மீது படை எடுத்திருக்கும்: அதன் பின்னர் இந்த அணுசக்தி ஆலைப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்ப்பதற்கே வாய்ப்பு இல்லாமல் போய் இருக்கும்.

ஆயுதப்படைகளின் ஆதரவைப் பெற்ற கிம் யொங் இல்

வடகொரிய ஜனாதிபதி கிம் இல் — சுங்கின் மரணச் சடங்குகள் எதிர்வரும் புதன்கிழமை தலைநகர் பியாங்யாங்கில் (Pyongyang) நடைபெறுகின்றன. மரணச் சடங்குகளில் கலந்து கொள்ள வெளிநாட்டுப் பிரமுகர்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் கிம் யொங் — இல் ஆயுதப் படைகளின் ஆதரவைப் பெற்றவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிம் இல் — சுங்கின் மரணச் செய்தி அறிவிக்கப்பட்டவுடன் தனது படைகளை உஷார்ப்படுத்திய தென் கொரியா தற்போது வழமை நிலைக்குத் திரும்பி உள்ளது.

வட கொரியாவைப் பொறுத்தவரை அமெரிக்காவின் முக்கிய நோக்கம், வட கொரியாவின் அணுசக்தித் திட்டங்களை முடிவுக்குக் கொண்டுவந்து வட கொரியாவைப் பணியவைப்பதே.

எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை மூலம் வட—தென் கொரியாக்களை இணைக்க இப்படியான ஒரு சூழ்நிலை அவசியம் என்று அமெரிக்கா கருதுகிறது.

ஆனால் சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் ஏற்கெனவே பொருளாதார ரீதியில் பலவீனம் அடைந்துள்ள வட கொரியா தனது அணுசக்தி ஆலைகளை வைத்துக் கொண்டு அமெரிக்காவுடன் பேரம் பேசலாம் என்று நினைக்கிறது.

கிம் யொங்—இல்லின் ஆட்சியில் வட கொரியாவின் கடும்போக்கு தணியும் என்பதே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

சஞ்சாரன்

சர்வதேச அணுசக்தி ஏஜென்சி உறுப்பினர்கள் தனது நாட்டில் தொடர்ந்து தங்கி இருக்க வட கொரியா அனுமதித்துள்ளதையும் —

தனது அணு சக்தி ஆலைத் திட்டங்களை நிறுத்தி இருப்பதையும் —

உச்சிப் பேச்சுக்களை நடத்த இணங்கி இருப்பதையும் — பிரச்சினைக்குத்தீர்வாகக் கருத முடியாது.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பாதையையே தற்போது வடகொரியா திறந்து விட்டுள்ளது.

★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பகம்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை;
சித்தியடைய உதவும் சில உத்திகள்!

பரீட்சைத் திணைக்களம் நடத்தும் ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

இப் பரீட்சையில் சித்தி பெற திறமை மட்டும் போதாது, வேறு சில உத்திகளையும் கையாள வேண்டும் என்று கட்டுரையாளர் கூறுகின்றார்.

இலங்கை அரசாங்கம் வருடாவருடம் புலமைப் பரிசில் பரீட்சையை நடத்தி திறமை உள்ள மாணவர்களைத் தெரிவு செய்கின்றது. ஆனால் அப்பரீட்சையில் சிலர் சித்தியடைகின்றனர். பலர் சித்தியடைவதில்லை. காரணம் என்ன?

சித்தியடைந்த மாணவர்கள் அனைவரும் விவேகம் உள்ளவர்களா? சித்தியடையாத மாணவர்கள் விவேகம் இல்லாதவர்களா? என்று சிந்திக்கும் போது சில விவேகம் உள்ள மாணவர்களும் சித்தி பெறாமல் இருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. எனவேதான் பரீட்சைக்கு தம்மை எவ்வாறு ஆயத்தம் செய்யலாம் என்பதை தெரிந்து கொள்வது மாணவரின் கடமையாகும்.

எவ்வாறு ஆயத்தம் செய்வது?

வகுப்பு ஆசிரியர் மிகவும் சிரமப்பட்டு கணிதம், தமிழ் ஆகிய இரு பாடங்களையும் கற்பித்து விடுகின்றார். பாடத்தில் உள்ள விடய அறிவை மாத்திரம் பெற்று விட்டால் போதும், பரீட்சை எழுதத்தகுதி அடைந்து விட்டோம் என்று மாணவர் எண்ணுவது தவறு. படித்த விடயங்களில் பல பயிற்சிகளை செய்து பழகுதல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன் பல மாதிரி வினாப்பத்திரங்களுக்கு விடை எழுதி வகுப்பாசிரியரிடம் அல்லது தகுதி வாய்ந்த வேறு யாரிடமாவது காண்பித்து திருத்தம் செய்வித்து தமது நிலையை அறிந்து கொள்ள வேண்டும். தாம் விட்ட தவறுகளுக்கு சரியான விடையை ஆசிரியரிடம் கேட்டறிந்து அல்லது பாடப்புத்தகங்களில் பார்த்தறிந்து மீண்டும் அந்த வினாக்களுக்கு மிகச்சரியான விடைகளை எழுதி சந்தேகங்களை தீர்த்துக் கொள்ளல் வேண்டும்.

கல்வி

பயிற்சிகளை பாடசாலையில் மட்டுமன்றி, தனியார் கல்வி நிலையங்கள் பரீட்சை இடும் போது நடத்தும் மாதிரிப் பரீட்சைகளிலும் பங்கு பற்றி மாணவர் தம்மை மதிப்பீடு செய்து, தம்மைப் பரீட்சை எழுதத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும்.

கணித பாடம

முக்கியமாக, கணித பாடத்தில் மாணவர்கள் கணிதத்தின் அடிப்படை அறிவுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கணிதத்தில் உள்ள நான்கு விதிகளான கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவற்றில் விரைவாகவும், சரியாகவும் செய்யப் பயிற்சி பெற்றிருப்பது அவசியம். அத்துடன் பெருக்கல் வாய்பாடுகள் அளவை வாய்பாடுகளை மனனஞ் செய்து வைத்திருத்தல் அவசியம்.

வாய்பாடுகள் தெரிந்திருந்தால் கடதாசியில் கூட்டிக் கழித்து பெருக்கிப் பார்க்கும் நேரத்தைக் குறைக்க முடியும்.

தமிழ்ப் பாடம்

தமிழ்ப்பாடத்தில் மாணவர்கள் பிழையின்றி வாசிக்கும் ஆற்றல் உள்ளவர்களாயும் எழுத்துப் பிழையின்றி, உறுப்பாக எழுதத் தெரிந்தவர்களாகவும் வேகமாக எழுதப் பயிற்சி பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பத்திரிகை புத்தகங்களில் உள்ள மாதிரிக் கட்டுரைகளை வாசித்து அதுபோல் தானும் எழுதுவதற்குப் பழகிக்கொள்ளல் வேண்டும். சிறந்த சொல் ஆற்றலும் கற்பனைத் திறனும் கட்டுரை எழுதும் ஆற்றலும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

திறமை மட்டும் போதுமா?

பல மாணவர்களிடம் எல்லாத்திறமைகளும் காணப்பட்டாலும் பரீட்சை வினாப்பத்திரத்திற்கு விடை அளிக்கும் போது பல தவறுகளை செய்து சித்தியடையும் சந்தர்ப்பத்தை இழந்து [illegible] கள் எனவேதான் மாணவர்கள் பின்வரும் [illegible] களை அறிந்து கொள்ள வேண்டும்.

மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் வினாப்பத்திரத்தைப் பெற்றவுடன் முதலில் சுட்டிலக்கத்தை தெளிவாக எழுத வேண்டும். பயப்படாமலும் பதற்றப்படாமலும் எல்லா வினாக்களையும் ஒரு முறை வாசித்து, யோசித்து நன்றாகத் தெரிந்த வினாக்களுக்கு முதலில் விடை அளிக்க வேண்டும் பின்பு ஓரளவு விடைதெரிந்த வினாக்களுக்கு விடை அளிக்கலாம்.

நேரத்தை விரயமாக்காதீர்

முற்றாக விடை எழுத முடியாது என தோன்றும் வினாக்களுக்கு பிழையான விடைகளை எழுதி நேரத்தை விரயம் செய்வதிலும் பார்க்க விடை எழுதாமல் விடுவது நல்லது விடைகள் யாவும் எழுதி முடிந்த பின், நேரமிருப்பின் எழுதிய விடைகளை திரும்ப ஒரு முறை வாசித்து சரிபார்த்துக் கொள்ளலாம். மேற்கூறிய அறிவுறுத்தல்களை மாணவர்கள் பின்பற்றி பரீட்சைக்கு ஆயத்தம் செய்து பரீட்சை எழுதினால் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவது நிச்சயம்.

"[illegible] பட்டம் பெறுவர்"

எஸ். என். அரசு

★

யாழ். மாவட்டத்தில் கொத்தமல்லி கார்த்திகை மாதத்தில் பயிரிடலாம்

கொறியான்டரம் சற்றைவம் என்ற தாவரவியல் பெயரை கொண்ட கொத்தமல்லி ஒரு சிறிய செடியாகும். 60-75 சதமமீற்றர் உயரம் வரை வளரும் 4-4½ மாத பயிராகும்.

சரக்கு பயிராகவும் மருந்துக்கும் குடிபாணம் தயாரிக்கவும் கொத்தமல்லி பயன்படுகின்றது. கொத்தமல்லிக் கீரை சுண்டிசாப்பிடப்படுவதுடன், இரசத்துக்கும் வாசனைக்காக இடப்படுகின்றது. கொத்தமல்லி எமது பிரதேசத்தில் செழிப்பாக வளரக் கூடியது. ஆனால் எமக்கு தேவையான கொத்தமல்லி மட்டுமல்ல இங்கு பயிரிடக் கூடிய பல சரக்கு வகைகள் எமது பிரதேசத்திற்கு வெளியே இருந்து வரவேண்டியுள்ளது.

இவற்றை சிறிய அளவில் நாம் பயிரிட்டால் எமக்கு தேவையான கொத்தமல்லியை பெற முடியும்.

கொத்தமல்லிக் கீரையில் 12 ஆயிரத்து 500யூனிற் 'விற்றமின் ஏ' யும் 130 யூனிற் 'விற்றமின் சீ' யும் புரதமும் உண்டு இப் பயிரை எமது பிரதேசங்களில் கார்த்திகை நடுப்பகுதியில் பயிரிடலாம். இதன் வளர்ச்சிக்கு அதிக வெப்பமில்லாத மழைத்தூறல் உள்ள காலநிலை சிறந்தது. மழை இல்லா விட்டால் குறைவான நீர்ப்பாசனத்துடன் இப் பயிரை வளர்க்கலாம்.

நீர்வடியும் தன்மையுள்ள இருவாட்டித் தரைகளில் கொத்தமல்லி சிறப்பாக பயிரிட முடியும்.

நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு இட்டு கொத்தி அல்லது உழுது நிலத்தை பண்படுத்தி 45சத மீற்றர் இடைவெளியில் கால்வரம்பு அமைக்க வேண்டும்.

அபிவிருத்தி

விதைப்பதற்கு முன்பதாக கொத்தமல்லி விதைகளை ஓர் மர உருளையினால் உருட்டி இரு பாதிகளாக உடைத்துக் கொள்ள வேண்டும். 45 சதம மீற்றருக்கு ஒவ்வொன்றாக 0 6 சதமமீற்றர் ஆழத்தில் நாட்டவேண்டும். ஒரு ஹெக்டருக்கு விதைப்பதற்கு 15கிலோ கொத்தமல்லி தேவை.

விதைத்து 8-10 நாட்களில் பயிர் முளைத்து விடும். நட்டு 1ஆம், 2ஆம் மாதத்தில் இரு தடவை கையால் களை கட்டலாம்.

பயிர் வளர்ந்து 2 மாதங்களில் பூக்கத் தொடங்கும். பூத்தபின் இப்பயிரை 60-70 நாட்களில் அறுவடைசெய்யலாம்.

அறுவடை பதப்படுத்தல்:-

மப்பு மந்தார நேரத்தில் அல்லது காலை நேரத்தில் அறுவடை செய்தால் விதைகள் வெடித்து உதிர்வதைக் குறைக்கலாம். பயிரை அடியோடு வெட்டி சிறு கட்டுகளாக கட்டி 3 அல்லது 4 நாட்கள் குவித்து வைத்தல் வேண்டும். இதனால் மல்லி ஒரே தரப்பட்டு அதன் நிறம் மணம் மேன்மையடைவதும் அல்லாமல் அறுவடைசெய்த பயிரை அடித்துப் பக்குவப் படுத்துவதற்கும் இலகுவாக இருக்கும்.

குவித்துவைத்த குவியல்களை காலையில் படங்கில் பரவி வெய்யிலில் காயவிட்டு தடிகளால் அடித்து அல்லது காலால் மிதித்து மல்லியை புறம்பு படுத்திய பின் அதைப் புடைத்துச் சுத்தப்படுத்தல் வேண்டும்.

விளைவு

இப்படியாகச் சுத்தப்படுத்திய மல்லியைப் பின்பும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு வெய்யிலில் பரவிக் காய வைத்தல் வேண்டும். ஒரு ஹெக்டரில் இருந்து ஏறத்தாழ 1,500 கிலோ விளைவாக எதிர் பார்க்கலாம்.

தகவல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

★

மனநிலையை பிரதிபலிக்கும் மனிதனின் செயல்கள்

நம் மனம் என்ன நிலையில் உள்ளது என்பதை நம்முடைய செயல்களே தான் காட்டிக் கொடுக்கின்றன.

ஒரு ஏரியில் நீர் தெளிவாக இருக்கிறது. அதில் ஒரு சிறு கல்லைத் தூக்கி எறியுங்கள் உடனே அடியில் உள்ள சேறு மேலே வருகிறது. நம் மனதும் அப்படித்தான் இருக்கிறது.

ஒரு ஏரியின் அடியில் முழங்கால் அளவுசேறு இருக்கலாம் ஏரித் தண்ணீரின் மீது கல் விழும் போதுதான் அது தெரிகிறது.

"நமக்குக் கோபம் வந்தது" என்று சொல்லுகிறோம். கோபம் என்ன வெளியிலிருந்தா வந்தது? ஏரியின் சேற்றைப் போல அது உள்ளேயிருந்தது. அதனால் வெளியே வந்தது.

சமயம்

மக்கள் வெள்ளைஆடையை விட, வர்ண ஆடையைத் தான் அதிகம் விரும்புகிறார்கள். வர்ண ஆடை அழுக்காகாது என்று கூறுகிறார்கள். வர்ண ஆடை அழுக்காகாதா? கட்டாயம் ஆகும். ஆனால் அழுக்கு வெளியே தெரியாது. ஆனால்வெள்ளை ஆடையோ, "நான் அழுக்காக இருக்கிறேன். தயவு செய்து என்னை சுத்தம்செய்யுங்கள்" என்று கதறுகிறது.

இப்படி உண்மையைச் சொல்லும் ஆடைகளைக் கண்டால் மக்களுக்குப் பிடிப்பதில்லை. இதே மாதிரி நமது வினைகளும் கூறுகின்றன.

நாம் கோபத்துக்கு ஆளாவதைபோ, சுயநலவாதிகளாக இருப்பதைபோ நம் வினைகள்தான் பறைசாற்றுகின்றன,

நம்முடைய உண்மை சொரூபத்தைக் காட்டும் நிலைக் கண்ணாடி கர்மம்,

நம்முடைய முகம் அழுக்காக இருக்கிறது என்று காட்டுகிறது என்பதற்காகக் கண்ணாடியை உடைத்துப் போடுவதா? அதற்குப் பதில், அதற்கு நன்றி செலுத்திவிட்டு, போய் முகத்தைக் கழுவிக்கொண்டு, மீண்டும் கண்ணாடியில் முகத்தைப் பார்க்க வேண்டும்.

அதே மாதிரி, கர்மங்கள் மூலம் மனதில் உள்ள அழுக்குகள் வெளியில் தெரிகின்றன என்பதற்காகக் கர்மம் செய்யாமல் இருக்கலாமா? ஆகவே நாம் தொடர்ந்து வினைகள் ஆற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். அதன் மூலம் மனதில் உள்ள அழுக்குகள் தெரிய, அவற்றைக் களைய முற்பட வேண்டும்.

—விநோபாவின் கீதைப் பேருரைகள்'' என்னும் நூலிலிருந்து

★

நன்றி நவிலல்

09-07-1994இல் நடைபெற்ற எமது பெற்றோர், தெல்லிப்பழை இயாமாவளையைச் சேர்ந்த திரு. திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி, திருமதி கயல்நாயகி தம்பதிகளின் திருமண வைரவிழா, எமது தந்தையாரின் எண்பத்தைந்தாவது பிறந்ததின விழா என்பவற்றில் பங்குபற்றிச் சிறப்பித்தவர்களுக்கும், ஆசியுரை, வாழ்த்துரை வழங்கியும் வாழ்த்துச் செய்தி அனுப்பியும், எம் பெற்றோரைக் கௌரவித்தவர்களுக்கும், மேளக்கச்சேரி, இன்னிசைக் கச்சேரி வழங்கியோருக்கும், இன்னும் பல்வேறு வகைகளில் எமக்குதவியோருக்கும், எமது உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

இப்படிக்கு,
திரு. சுந்தரமூர்த்தி தம்பதிகளின்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மாஸ்ரர் சராஜ்,
உரும்பிராய்; [7266]

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பொமனேரியன் நாய்க்குட்டிகள், வான்கோழி (பேடு), மீன் தொட்டி ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு, இல. 9, பிளைச்சர் லேன், கண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில், கண்டிக்குளி.
(31954)

புதிய போட்டோ பிரதி இயந்திரம்-Gestetner Copier 8201 விற்பனைக்குண்டு. அறிவரன், இல. 309, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம்; (வானவில்லுக்கு அருகில்) பிற்பகல் 4 மணி தொடக்கம் 5 மணி வரை பார்வையிடலாம்.
(7271)

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பன்டம், வான்கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(31958)

காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பெருங்குளம், சங்கத்தானை வீதியில் அமைந்துள்ள 15 (பதினைந்து) பரப்பு பயனுள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J. S. T. Stationery - ஜெய. க. தா. காகிதாதிகள், இல. 15, கண்டி வீதி, கோட்டடி, சாவகச்சேரி. (31864)

கோழி விற்பனை

முட்டையிடும் வெள்ளடி, லார்க்கோழிகள், நல்லின வளர்ந்த பேட்டுச் சேவற் குஞ்சுகள், விறாத்துக் குஞ்சுகள், சேவல்கள், பன்டம் கோழிகள், சேவல்கள், பாமால், கிகிகி சேவல்கள், தாராக்கள் அடை முட்டைகள் உடன் விற்பனைக்குண்டு. 84 (262), பலாலி வீதி, கந்தர்மடம் [31938]

கோழிக்குஞ்சு விற்பனை

Prima, Christombu Broiler குஞ்சுகள், சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(31959)

வீடு விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படி ஒழுங்கை தலையாளியில் 8½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: டாக்டர் அ. பாண்டுரங்கன், தலையாளி, கொக்குவில்.
[7536)

தேவை

அருச்சுனா வீதியில், மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வியாபார ஸ்தலத்திற்கு பங்காளர் உடன் தேவை. திருமதி கமலா கருணானந்தன், இல. 16/1, மணத்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(31942)

தட்டாதெரு, இலுப்பையடிச் சந்தி, ஆனைப்பந்தி, ஆரியகுளம் பகுதிகளில் ஓர் தொழிற்சாலை அமைப்பதற்குத் தெரு ஓரமாக வெறும் காணி அல்லது கட்டடம் தேவை. கடிதமூலம் 25-7-94க்கு முன் தொடர்பு கொள்ளவும்: S. V. சிறீஸ்கந்தராசா, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
[7270]

தங்கியிருந்து ஆடுகள், கோழிகள் பராமரிப்பதற்கு ஓர் இளம் ஆள் தேவை. குடும்பமாகவும் தங்கியிருக்க வசதி உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (31960)

முருகன் வண்ணப் படம்

தோகை விரித்தாடும் மயிலுடன் ஞானவேல் கையேந்தி "அஞ்சேல்" என்று அபயங்காட்டி நிற்கும் பால முருகன் வண்ணப்படம் 450 கிராம் மில்க்வைற் சவர்க்காரத் தாள் பக்கற்றுடன் அன்பளிப்பாகக் கிடைக்கிறது. இருப்பு உள்ளவரை மட்டுமே. முந்துங்கள். "மில்க்வைற்". (சி-8749)

O/L MATHS

O/L இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 27 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆரு[illegible]நாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, இராசேந்திரா வீதி, கண்டிக்குளி.
(7581)

இறைச்சிக் கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து கொடுக்கப்படும். [வெலிங்டன் சந்தி அறிவகம் அருகில்] 382, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [31838]

புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும்.
[7445]

புலமைப் பரிசில் பரீட்சைக்கென தமிழ் மீட்டல் பயிற்சி (விடைகளுடன்) 21 மாதிரிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளது. படித்துப் பயனடையுங்கள். ஒவ்வொரு ஞாயிறு தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள்களையும் [தமிழ், கணிதம்] பெற்றுக் கொள்ளலாம் மாதிரி வகுப்புக்களும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[7536]

வீடு தேவை

சிறு குடும்பம் ஒன்றிற்கு தனியாகவோ அனெக்ஸ் ஆகவோ வீடு ஒன்று தேவை. யாழ். மாநகர எல்லைக்குள் இருத்தல் விரும்பத்தக்கது. விளம்பர இல. 668, கே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(31924)

மணமக்கள் தேவை

குற்றமுள்ள 35 வயது குவைத்திலிருந்து வந்தவருக்கும், குற்றமற்ற 41 வயது T.Aக்கும், 29 வயது சுவிஸ் மணமகனுக்கும், 34, 37 வயது டாக்டர்களுக்கும், 34 வயது பெண் Stenoவுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம். [31955]

காவேரி சீயாக்காய்

கண் குளிர்மை, ஞாபக சக்தி, கூந்தல் வளர்ச்சிக்கும், பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதற்கும், முடி உதிர்வதை தடுப்பதற்கும் நீங்கள் பாவிக்க வேண்டியது காவேரி சீயாக்காய்ப் பவுடர். (31788)

வெளிவந்துவிட்டது!

வெளிவந்து விட்டது!!! அடிப்படைச் சந்தைப்படுத்தல் விலை 40/- சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் ஆக்கியோன்: தேவராஜன் ஜெயராமன் B.Com (Hons) M B A, A M I P M விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (7528)

மணிக்கூடுகள் திருத்துதல்

சகல மணிக்கூடுகள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேர்க்ஸ், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை, கண்டி வீதி, சாவகச்சேரி, தலைமையகம் 284, வானவில் அருகில் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-8299)

இடமாற்றம்

ஓட்டுமடம் பொன்னப்பா ஒழுங்கையில் இயங்கிவந்த எனது வைத்தியசாலை தற்பொழுது யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி சந்திக்கு அருகாமையில் (சிவன் வடக்கு வீதி) இயங்கிவருகிறதென்பதை அறியத் தருகிறேன். வைத்தியர் சிவசம்பு. (31858)

இலகு திருமண சேவை

36 வயது, ஆசிரியம், செல்வாக்குற்ற Computer Programmer அபுதாபி வதிவிட உரிமையுள்ளவருக்கு அழகான Computer/Accountant பயின்ற மணப்பெண் தேவை. தொடர்பு: து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி.
(31867)

வெளிவந்துவிட்டது!

G. C. E. A/L
LOGIC - II

விஞ்ஞான முறையியல்

S. SANTHIRARAJAH
B. A. (S. L. E. A. S.)

சரசு பதிப்பக வெளியீடு

[7527]

பயன்மரம் பழுத்ததோ

சமயப் பணியை, சமூகப் பணியுடன் இணைக்கும் அன்னையின் பெரு முயற்சியில் விழுதாய் நின்று வீறுடன் உழைத்த பெருமகன், நல்லாசிரியன், நற்குணசீலன்,

அமரர் சு. சிவவாகீசர் B. A.
அவர்களின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
அவர்தம் குடும்பத்தாருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

அகில இலங்கைக் கம்பன் கழகம்,
காரைநகர் கம்பன் கழகம்,
வடமராட்சிக் கமபன் கழகம்,
திருகோணமலைக் கம்பன கழகம்,
ஊரெழுக் கம்பன் கழகம்.

[சி-8753]

பணி நிலை வெற்றிடங்கள்

கீழ்க்காணப்படும் பணி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) காசாளர் - தனியார், அரச நிறுவனங்களில் காசாளராகப் பணிபுரிந்த அனுபவம்.
(2) உள்ளகக் கணக்காய்வாளர் (அ) க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான கல்வித் தராதரம். (ஆ) தனியார் அரச நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வாளராகப் பணிபுரிந்த அனுபவம்.
(3) பாதுகாப்பு ஊழியர்
(4) மூச்சக்கர மிதிவண்டி ஓட்டுநர்
(5) நோயாளர் பராமரிப்பாளர்
(6) உணவு பரிமாறுபவர்
(7) தேநீர்த் தயாரிப்பாளர்

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

நோயாளர் நலன்புரி சங்க
தலைமைச் செயலகம்
572, கேர்ணல் கிட்டுசாலை,
யாழ்ப்பாணம்.

- ★ 22-07-94க்கு முன்னர் நேரிலோ தபால் மூலமோ அனுப்பி வைக்கலாம்.
- ★ ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
- ★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகக்குழு
நோயாளர் நலன்புரிச் சங்கம்

(31944)

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை

பொதுப் பட்டமளிப்பு

1994 — 09 — 10

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்பின் டிப்ளோமாக்கள் / முதுமாணி / கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்கான 1994 - 09 - 10 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 1994 - 08 - 15க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல் வேண்டும்.

01. கலாநிதித் தேர்வு
02. முது தத்துவமாணித் தேர்வு
03. முது கலைமாணித் தேர்வு
04. முது விஞ்ஞானமாணித் தேர்வு
05. கல்விப் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் தேர்வு 1992
06. ஆங்கில மொழி கற்பித்தலில் பட்டப்பின் டிப்ளோமா 1992
07. ஆங்கில மொழி கற்பித்தலில் டிப்ளோமா 1992
08. வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணி தேர்வு 1992
09. வணிகமாணித் தேர்வு 1992
10. தொழில் நிர்வாகமாணித் தேர்வு 1992
11. சிறப்பு விஞ்ஞானமாணித் தேர்வு 1992
12. சிறப்புக் கலைமாணித் தேர்வு 1992
13. பொது விஞ்ஞானமாணித் தேர்வு 1992
14. பொதுக் கலைமாணித் தேர்வு 1992
15. இசை/நாட்டியக் கலைமாணித் தேர்வு 1992
16. சித்த வைத்தியமாணி, சத்திர சிகிச்சை மாணித் தேர்வு 1992

வேண்டுகோள்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பி வைத்தல் வேண்டும். வேண்டுகோட் படிவங்களையும், மற்றும் விவரங்களையும் முத்திரை ஒட்டிய 23 X 10 cm அளவுடைய, சுய முகவரியிட்ட கடித உறையை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தேர்வுகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலை நேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக் கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்குக் கிடைக்கப் பெறாத வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படும்.

வேண்டுகோட் படிவங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, 20 உவார்ட் பிளேஸ், கொழும்பு-7 என்ற முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர்.

[சி-8752]

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

உலகில்...
01
—
12
—
1942

உள்ளத்தில்...
17
—
07
—
1989

அமரர்
ஆ. மகாலிங்கசிவம்
(நில அளவையாளர்)

ஆண்டுகளோ ஐந்தின்
நன்றனவே யாயிடினும்
நீண்டவுன் அன்புநெறி நீங்குமோ!
ஆண்டவனே!
நாடு நமதுதமிழ்
வீடெனவே நின்றவுன்றன்
பீடுதனை யாரறிவார் பேசு!

மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்.

தெல்லிப்பழை,
வித்தகபுரம் — 'விழிதிட்டி'
1994 - 07 - 17
[7269]

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05
—
07
—
1930

மறைவு:
17
—
07
—
1993

தேவசகாயம் லூயிஸ் செல்வநாயகம்

கண்ணை இமைகாப்பது போல் என்னை அரவணைத்துக் காத்த என் அன்புத் தெய்வமே! திடீர் என நீங்கள் என்னை விட்டுப் பிரிந்த ஓராண்டு காலத்தை ஒரு யுகமாய்க் கழித்து விட்டேன். புன்சிரிப்பில் புது மலராய் நிறைந்து நின்ற கோலத்தை நெஞ்சினிலே சுமந்து கொண்டு உங்கள் நினைவே வாழ்வாக உயிரையே சுமக்கின்றேன். எஞ்சிய என் காலத்தை குல தெய்வம் போலிருந்து என்னைக்காக்க வேண்டுமென்று உங்கள் வரம் கேட்டு நிற்கிறேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி சுகிர்தலங்காரம்.

M2, அன்டர்ஷன் பிளட்ஸ்,
கொழும்பு.
(7265)

ஆயிரக்கணக்கான வீரர்கள் பங்குபற்றும்
வன்னி விளையாட்டு விழா
பெரியளவில் ஏற்பாடு

கிளிநொச்சி ஜூலை 17
வன்னி ஐக்கிய விளையாட்டுச் சபை நடத்தும் மாபெரும் வன்னி விளையாட்டு விழா கிளிநொச்சி பொது விளையாட்டுத்திடலில் எதிர்வரும் 21 ஆம் 22 ஆம் 23 ஆம் 24 ஆம் திகதிகளில் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் பெரியளவில் செய்யப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து 4 நாட்கள் இரவு பகலாக போட்டிகள் நடைபெறும். இரவு நிகழ்ச்சிகள் மின்ஒளியில் இடம்பெறும்

போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய 15 விளையாட்டுக் கழகங்கள் வட்ட ரீதியாக பங்குபற்ற உள்ளன.

ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர்கள் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-76)

இடம்பெயர்ந்த மக்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 17
பலாலி, வசாவிளான், வளலாய், இடைக்காடு, குப்பிளான் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தற்போது வசிப்பவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிறு பிற்பகல் 4 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

முக்கியமான விடயங்கள் பல கலந்துரையாடலில் இடம்பெறவிருப்பதால் இடம்பெயர்ந்தோரில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பெண்கள் அனைவரையும் அதில் கலந்துகொள்ளுமாறு கோப்பாய் வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

சார்க் உச்சி மாநாடு ஒத்திவைப்பு

புதுடில்லி, ஜூலை 17
இந்தியாவில் எதிர்வரும் அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் நடைபெறவிருந்த சார்க் நாடுகளின் உச்சி மாநாடு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது.

இந்தியாவின் பல மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்கள் வருட இறுதியில் நடைபெறவிருப்பதால் இந்த மாநாட்டை ஒத்திப்போடும்படி இந்திய அரசு கோரிக்கை விடுத்திருந்தது.

மாநாடு ஒத்திவைக்கப்பட்ட தகவலை இந்திய வெளியுறவு அமைச்சர் கே. ஸ்ரீநிவாசன் நேற்று வெளியிட்டார்.
(இ-எ)

புலிகளின் குரல் வானொலியில்

17 — 07 — 1994
ஞாயிறு இரவு
★ 8-01 — இசையரங்கம் நிகழ்ச்சி — பாடுபவர்: திரு. வி. வி. சாமி
★ 8-20 — தாயகப் பாடல்கள்
8-30 — செய்திகள்
★ 8-40 — தொடர் நாடகம் 'இலங்கை மண்' 82 ஆம் அங்கம்

18 — 07 — 1994
திங்கள் காலை
★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணிமாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

அறுபதாவது அகவை விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17
நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையம் திரு. நா. காசிவிஸ்வநாதனின் சமூகப் பணிகளை கௌரவிக்கு முகமாக நடத்தும் 60 ஆவது அகவை விழா நிலைய முன் மைதானத்தில் நாளை திங்கள்கிழமை மாலை 4-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

நிலையத் தலைவர் திரு. செ. மன்மதராஜலிங்கம் தலைமையில் நடைபெறும். விழாவில் திரு. காசிவிஸ்வநாதன் பொன்னாடைபோர்த்துக் கௌரவிக்கப்படுவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க)

எழிலூர் வேளாங்கண்ணி பெருவிழா இன்று

யாழ்ப்பாணம். ஜூலை 17
கொழும்புத்துறை எழிலூர் அன்னை வேளாங்கண்ணி ஆலய பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

காலை 6 30 மணிக்கு திருநாள் திருப்பலி, வேளாங்கண்ணி அன்னையின் திருச்சுரூபப் பவனி, ஆசிர்வாதம் என்பன இடம்பெறும்.
(ஒ-17)

தாதிகள் தேவை

ஸ்ரான்லி கண் சத்திர சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றுவதற்கு அனுபவமுள்ள பெண் தியேட்டர் தாதிமார் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

57/48, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

[31956]

தமிழீழத்தின் பிரபலமான
சமூக பொருண்மிய விஞ்ஞான
ஆய்வு இதழான

'ஆதாரம்'

சஞ்சிகையினை

யாழ்ப்பாணத்தில்
வடமராட்சி, தென்மராட்சி
வலிகாமம் போன்ற இடங்களில்

விற்பனை செய்யக்கூடிய
விற்பனை முகவர்கள்
பின்வரும் விலாசத்துடன்
தொடர்பு கொள்ளவும்.

ஆதாரம்
செய்தித் தொடர்பு வெளியீட்டுக் கிளை,
முதன்மைச் செயலகம்,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தாவடி,
தமிழீழம்.

○ தெரிவாகும் முகவர்களுக்கு நியாயமான விற்பனைக் கழிவு வழங்கப்படும்.

○ **விண்ணப்ப முடிவு திகதி: 23-07-1994**

[சி-8750]

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

அரசும் அவசரகாலமும்

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஸ்ரீலங்கா அரசினால் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த அவசரகாலச்சட்டம் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவுடன் காலாவதியாகிவிட்டது.

ஸ்ரீலங்கா ஜனாதிபதியால் அரசமைப்பின் 18 ஆவது அத்தியாயத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான அவசரகால விதிகள், மாதம் தோறும் நாடாளுமன்றத்தினால் நீடிக்கப்பட்டு வந்தன.

நாட்டில் அமைதியின்மை, கலவரம் போன்ற இயல்பு நிலைக்கு மாறான நெருக்கடிகள் ஏற்படும் போதே அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்படுவதுண்டு. ஆனால் இங்கு, வடக்கு-கிழக்கு பாதுகாப்பு நிலவரத்தைக் காரணம் காட்டி, தெற்கிலும் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அவசரகால விதிகளை நீடிப்பதாயின் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டும் என்பதாலும்—

அவசரகாலச் சட்ட விதிகள் நடைமுறையில் இல்லாத— சாதாரண— வழமையான சூழ் நிலையில் பொதுத்தேர்தல் நடத்தப்படுவதாக உலகுக்குக் காட்ட வேண்டும் என்பதாலும்—

அவசரகாலச் சட்ட விதிகளை காலாவதியாக ஐ.தே.க. அரசு அனுமதித்திருக்கிறது.

அவசரகால விதிகளை நீடிப்பதற்காக கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கு முயற்சி எடுத்தால், அது இரண்டு விதமான நெருக்கடிகளைக் கொண்டு வரக்கூடும் என ஜனாதிபதி விஜேதுங்கா கருதுகிறார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அரச தரப்பு எம்.பிக்களில் இருந்தவர்கள் பலர் பிரேமதாஸா ஆதரவாளர்கள். அவர்களுக்கு கடந்த முறை எம்.பி. பதவி கிட்டுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவரும் பிரேமதாஸா, அவர்களில் பலரை விஜேதுங்கா கைகழுவி விட்டுவிட்டார். தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலிலும் அவர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை. மாறாக பிரேமதாஸாவின் எதிரிகளான காமினி திஸநாயக்கா அணியினருக்கு அரசுக்குள்ளும், கட்சிக்குள்ளும், வேட்பாளர் பட்டியலிலும் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டினால் அங்கு ஆளும் கட்சியில் அரைவாசிப்பேர் அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவர் என்று டி.பி. விஜேதுங்கா கருதுகிறார்.

அதனால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றைக் கூட்டினால்—

'1. அங்கு அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணையை வெற்றிபெறச் செய்ய முடியாது. அது பொதுத்தேர்தலில் அரசுக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி விடும்.

2. நாடாளுமன்றத்தைக் கூட்டினால் அரச தரப்பில் உள்ள அதிருப்தியாளர்களையும் சேர்த்து தம்முடன் கோஷ்டி கட்டி, நாடாளுமன்றத்தை தேர்தல் பிரசாரத்துக்கான களமாக எதிரணியினர் அமைத்துக்கொள்வர்.

— இந்த இரண்டுக்கும் பயந்தே விஜேதுங்கா நாடாளுமன்றைக் கூட்டும் எண்ணத்தைக் கைவிட்டார் என்று கருதப்படுகிறது.

அவசரகாலச் சட்டம் காலாவதியாவதற்கு முன்னர்— அச்சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடை போன்ற ஒழுங்கு விதிகளை— அச்சட்டம் காலாவதியானபின்னரும் அமுல் செய்ய ஸ்ரீலங்கா அரசும் சிங்களப் படைகளும் தீர்மானித்திருக்கின்றன.

இது அரசமைப்புக்கும் அடிப்படை நீதிக்கும் முரணான செயலாகும்.

வடக்கு-கிழக்கு தமிழருக்கு எதிராக — சட்டத்தை மதியாமல் — சட்டத்தை தனது கையில் எடுத்துக் கொண்டு— ஸ்ரீலங்கா அரசு செயற்பட்டு வருகிறது என்பதை உலகுக்கு அம்பலப்படுத்தும் மற்றோர் உதாரணம் இதுவாகும்.

தேர்தலில் இனப்பிரச்சினை இரண்டாந்தர விடயமே; தமிழர் நாடாளுமன்றம் போய் எதனைச் சாதிப்பது?

ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி; அதன் பின்னர் அவர் யாரோ, நான் யாரோ — என்பது பேச்சு வழக்கு மொழி.

அந்த வாசகத்தை எழுத்துக்கு எழுத்து நடைமுறைப்படுத்துபவர்கள் இலங்கை நாட்டு அரசியல்வாதிகள்! ஆம். தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்தது முதல் வாக்களிப்பு நாள் வரை, அவர்கள் வாக்காளர்களின் குடும்ப உறவினராக மாறுவார்கள்: அவர்களின் குடும்ப சுகநலம், துக்கங்களில் கூடப் பங்குபற்றுவார்கள். நலம் விசாரிப்பார்கள். தேவையில்லாமலே உதவுவதற்கு முன்வருவார்கள்.

சந்திரிகா அரசமைப்பை மாற்றும் என்பதை கவ்விப்பிடித்திருக்கும் கூட்டணி

ஆனால் வாக்களிப்பு நடந்த ஒரு சில மணித்தியாலங்களில், அதுவும் தேர்தலில் வெற்றிபெற்ற எம். பியானதும், தாம் ஒரு வர்க்கம் மக்கள் வேறு வர்க்கம் என்றவாறு கணித்துச் செயற்படுவார்கள். அதன் பின்னர் மக்கள் அவர்களைத் தேடிச் செல்ல வேண்டும்: அவ்வாறு சென்றாலும் காண்பது அரிதாகிவிடும்.

ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான— 1994 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலுக்கான—நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு விட்டதால் இப்போது தென்னிலங்கையில் ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி படலம் நடந்து கொண்டிருக்கிறது. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து தெற்கில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளிடம் கூட முகம் தெரியாதவர்கள் எல்லாம் திடீர் விஜயம் செய்து அன்பு காட்டுகிறார்களாம். இன்னும் சுமார் ஒரு மாத காலத்துக்கு இந்தப் படலம் அங்கு தொடரும்

அரசியல்

இம்முறையும் தென்னிலங்கைத் தேர்தல் முந்திய முறைகளைப் போலவே அமைகிறது. இரண்டு பிரதான கட்சிகள்—அனேகமாக ஒரே அடிப்படைக் கொள்கைகளை உடைய ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் — தமக்கிடையே உள்ள சிறுசிறு வித்தியாசங்களுக்கும் புதுமுகங்கள் கொடுத்து தேர்தல் களத்தில் சமரிடுகின்றன.

வழமைபோல நடைமுறைச் சாத்தியமற்ற திட்டங்களை வாக்குறுதிகளாக்கி அள்ளி வீசுகின்றன. அத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நிதிவளம் உண்டா, அவற்றை அமுலாக்குவதனால் வேறு என்ன பாதகமான பக்க விளைவுகள் உண்டாகும் என்பதனை சிறிதும் அலசி ஆராயாமல் அவற்றைக் காட்டி மக்கள் வாக்குகளை கவர்வதற்கு முயல்கிறார்கள்.

வேலையற்ற இளைஞருக்கு மாதம் 1,200 ரூபா கொடுப்பனவு வழங்குவது என்ற ஐ. தே. கட்சியின் வாக்குறுதியும், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு என்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வாக்குறுதியும் இதற்கு நல்ல உதாரணங்கள்!

யதார்த்தம் எப்படி இருந்தால் என்ன? வாக்குத் திரட்டுவதற்காக கவர்ச்சியான ஒரு வாக்குறுதியை வழங்கிவிட்டால் போதும் — அதனைச் செயற்படுத்த முடியுமா, தேர்தல் முடிந்த பின்னர் அது நிறைவேற்றப்பட வேண்டுமா என்பது குறித்து அரசியல் வாதிகளுக்கு அக்கறை இல்லை. அதனால் சிறு சிறு கொள்கை வேறுபாடுகளை முன்னிறுத்தியே வாக்கு வேட்டை நடைபெறுகிறது. நாட்டு நலனுக்கு, அதன் நீண்ட கால சுபீட்சத்துக்கு முக்கியமான விடயங்களை முன்னெடுக்கும் தன்மை இன்னும் தெற்கில் வளரவில்லை.

இனப்பிரச்சினைக்கு இரண்டாவது இடம்

ஆம், இந்த நாட்டின் இன்றைய எரியும் பிரச்சினை இனப் பிரச்சினை; அதன் விளைவான வடக்கு-கிழக்கு யுத்தம். இவை இரண்டையும் தெற்கின் அரசியல் கட்சிகள் தேர்தல் களத்தில் இருந்து இரண்டாம் இடத்துக்குத் தள்ளிவிட்டன.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு போட்டியிடும் இரண்டு பிரதான கட்சிகளும் இனப் பிரச்சினை சம்பந்தமாகத் திட்டவட்டமான தீர்வுத் திட்டம் எதனையும் முன்வைக்கவில்லை. வழமையான வழுவல் நழுவல் தந்திரத்தையும் ஒளித்து விளையாடும் உத்தியையுமே கையாண்டுள்ளன.

இனப்பிரச்சினைக்கு வயதோ ஐம்பதுக்கு மேலாகி விட்டது. அதன் குழந்தைதான் தமிழர்களின் உரிமைப் போராட்டம்; அந்தக் குழந்தையும் வளர்ந்து வயது பதினைந்துக்கு மேலாகிவிட்டது. இத்தனை காலமாக இனப்பிரச்சினையை— தமிழர் பிரச்சினையை—தமக்கு வாக்குத் திரட்டும் கருவியாகவே சிங்களத் தலைவர்கள் பயன்படுத்தினார்கள்.

அதாவது தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதில் இரண்டு பிரதான கட்சிகளும் பேரினவாதக் கட்சிகளும்— போட்டி போட்டுச் செயற்பட்டன. அதற்காகச் சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தையும் தமிழருக்கு எதிரான பகைமையையும் வளர்த்தன. அதனை அடித்தளமாக வைத்து முறைக்கு முறை, தேர்தலுக்குத் தேர்தல் தமக்கு அரசியல் லாபம்— அரசியல் ஆதரவு — தேடின. ஒரு கட்சி தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதில் பத்து வீதம் செயற்பட்டது என்றால், அடுத்த கட்சி முப்பது வீதம் என்று பாய்ந்து தமிழர்களை இரண்டாந்தரப் பிரசைகளாக்கியது.

அப்போதெல்லாம் தெற்கின் அரசியல்வாதிகள் தமிழர் பிரச்சினையையே தேர்தல் காலங்களில் முதன்மைப்படுத்தினர்; அதனை முதன்மைப்படுத்தினால்தான் அடுத்த கட்சியை விட அதிக வாக்குத் தேடலாம் என்ற நிலையும் உருவாக்கப்பட்டது.

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

ஆனால் அண்மைக் காலத்தில் தமிழர் பிரச்சினை பூதாகாரமாக வடிவெடுத்ததும் அதனை எதிர்கொள்ள முடியாத நிலையில், அதற்கான தீர்வை முன்வைக்க விரும்பாத நிலையில், அப் பிரச்சினையை மெதுமெதுவாக இரண்டாம் இடத்துக்குத் தள்ள முற்பட்டனர்; அவ்வாறே ஒதுக்கிவிடவும் செய்தனர்.

குறிப்பாக 1977 க்குப் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தமிழர் விவகாரத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டனர். வெறும் பொருளாதார மற்றும் தனிப்பட்ட வேறுபாடுகளை முதன்மைப்படுத்தி, கவர்ச்சிகரமான வாக்குறுதிகளைக் கொடுத்து, சிங்கள மக்களை ஏமாற்றி வந்தனர்.

பொருத்தமான காலம்

இனப் பிரச்சினை தீர்க்கப்படாததால் இப்போது நேர்ந்து வரும் பேரழிவுகளின் மத்தியிலும், நாட்டின் சீரழிவுகளின் மத்தியிலும், நெருக்கடிகள் மத்தியிலும் கூட இம்முறையும் இனப் பிரச்சினையை இரண்டாந்தர விவகாரமாக்கி இருக்கின்றனர் சிங்கள அரசியல்வாதிகள். நாட்டின் இயக்கத்துக்கு அச்சுறுத்தலாக மாறிநிற்கும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களிடம் திராணியில்லை; விருப்பமும் இல்லை என்பதனையே இது எடுத்துக் காட்டுகிறது.

தமிழர் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும்; யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். அமைதியும், சமாதானமும் உருவாக்கப்பட வேண்டும். [illegible] நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். மக்களின் நலனைப் பேண வேண்டும் — என்ற உண்மையான விருப்பம் இருந்தால், அதனை நிறைவேற்றுவதற்கு, சிங்கள மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்கு தேர்தலைவிடப் பொருத்தமான காலம் வேறெதுவும் இல்லை.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க வல்ல நியாயமான, நீதியான தீர்வு ஒன்றை வகுப்பது, அதனைத் தென்னி லமை மக்களிடம் முன் வைப்பது. அந்தத் திட்டத்தை அங்கீகரிக்குமாறு அவர்களிடம் கோருவது. தேர்தலின் பின்னர் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது—இத்தகைய வழி முறை இருக்கும் போது சிங்கள அரசியல்வாதிகள் அதனை நாடவிரும்பவில்லை. தேர்தலைத் தக்கவாறு பயன்படுத்த முனையவில்லை.

அதனால் தமிழர் பிரச்சினையை இரண்டாந்தர விவகாரமாக்கி, பொருளாதாரம், மனித உரிமை மீறல்கள், வாழ்க்கைச் செலவு உயர்வு அடிப்படைப் பிரச்சினைகள், 21ஆம் நூற்றாண்டை நோக்கிய அபிவிருத்தி என்பவற்றை முதன்மைப்படுத்தி அவற்றைப் பற்றிப்பிடித்து சிங்கள வாக்காளருக்கு ஆசை வார்த்தைகள், வாக்குறுதிகளைக் கொடுத்து தேர்தலை நடத்த முனைந்துள்ளனர். இனப் பிரச்சினை, யுத்தம் என்பவற்றை அவர்கள் பொருட்படுத்துவதாக இல்லை.

அவர்களின் அக்கறை!

மொத்தத்தில் நாட்டின் மூலாதாரப் பிரச்சினையாக விளங்கும் இனப் பிரச்சினையை ஓரங்கட்டி விட்டு, தேர்தலை வெல்வதில் மட்டுமே அவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர். இரண்டு பிரதான அரசியல் கட்சிகளினதும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் அதனையே பிரதிபலிக்கின்றன.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் குறித்து அக்கறை கொள்ளவில்லை. நாட்டமும் செலுத்தவில்லை. ஆனால் தென்னிலங்கையில் சிங்கள மக்களோ நிம்மதியற்ற, அமைதியற்ற சூழ்நிலையில் தேர்தலைச் சந்திக்கின்றனர். சிங்கள அரசியல் வாதிகளோ தேர்தல் மூலம் தமது நிலையை ஸ்திரப்படுத்துவதிலேயே அக்கறையாக உள்ளனர்.

தமிழர்களை "நாடு அமைக்க" சொல்கிறார் விஜேதுங்கா!

சிங்களப் பொதுமக்களை— வாக்காளர்களைப் பொறுத்த வரையில், பெரும்பாலானோர், இப்போது தேர்தல் நடக்கிறதென்றால் நாட்டில் அமைதியும் சமாதானமும் எப்போது வரும் என்று கேட்கும் அளவுக்கு அரசியல் தெரிந்தவர்களாக உள்ளார்கள் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தகைய ஓர் அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த சிங்களத் தலைவர்கள் தவறுகிறார்கள் என்றால், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையோ, சமாதானம், அமைதி உருவாகுவதையோ அவர்கள் விரும்பவில்லை என்பதேயாகும்.

தேசத்தின் நலனைவிட தங்கள் நலனும், கட்சி நலனுமே முதன்மையானவை என்ற மனப்போக்கு மாறும்வரை இலங்கையில் அமைதி, சமாதானத்தை மருந்துக்கும் பெற முடியாது என்பது மட்டும் திண்ணம்!

★ ★ ★

தமிழ் அரசியல்வாதிகள்

இனப்பிரச்சினையை [illegible] பொருட்படுத்தாது [illegible] ஓரங்கட்டிய நிலையில் ஸ்ரீலங்காவின் தேர்தல் நடக்கிறதென்றால் —

அந்தத் தேர்தலின் மூலம் உருவாக்கப்படும் நாடாளுமன்றம் தமிழர் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வைக் கொண்டு வரும்? அங்குள்ள ஆசனங்களில் சிலவற்றைத் தமிழர்கள் நிரப்பி விடுவதால், அவற்றில் அமர்ந்து வாய் கிழியக் கத்துவதால், ஆகப் போவதென்ன?

இதனை உணராமல், இத்தனை ஆண்டுகால தமிழர் அனுபவத்தைக் [கணக்கில் கொள்ளாமல், இப்போதும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முனைந்திருக்கும் தமிழ் அரசியல் வாதிகளை எப்படி வர்ணிப்பது?

நாடாளுமன்றம் சென்றால் சுகபோகம் அனுபவிக்கலாம்; தமிழர் உரிமைகளை வென்றெடுக்க முடியாது. இதனைத் தெரிந்து கொண்டும் அந்தச் சபையின் ஆசனங்களில் அமர முயலும் சில தமிழ் அரசியல் வாதிகளும் அரசியல் வங்குரோத்து அடைந்தவர்களும், சுயநல வாதிகளுமே என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

தேர்தல் முடிந்த கையோடு பெரிய போர் காத்திருக்கிறது

''இலங்கையில் தற்போது தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் சூழலும் எண்ணமும் உருவாகி வருகிறது. அதற்கு ஆக்கபூர்வமான] ஆலோசனைகளையும் வழி வகைகளையும் கூறக் கூடியவர்கள் நாங்களே'' என்று தம்பட்டம் அடிக்கும் தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர்கள் நாடாளுமன்றம் சென்று சாதிக்கப் போவது என்ன?

முன்னர் பண்டாரநாயக்கா, டட்லி, சிறிமாவோ, ஜே. ஆர் என்று சிங்களத் தலைவர்களை நம்பிக் கெட்டவர்கள் கூட்டணியினர். ஆனால் இப்போது சூடு கண்ட பூனை மீண்டும் அடுப்படியை நாடும் புதிய போக்கினை உருவாக்கிக் கொண்டு சந்திரிகா அணியை நம்பி நாடாளுமன்றம் செல்ல முனைகிறார்கள்!

மொத்தத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இவர்களுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. அவர்களுக்குத் தேர்தலில் நாட்டம்; இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் நாட்டமில்லை. இவர்களுக்கும் தேர்தலில் நாட்டம். அதற்கு மேலதிகமாக தமிழர்களின் தலைமைத்துவம் தம்மிடமே உண்டு என்று காட்டுவதிலும் நாட்டம்.

வதந்தியை கவ்விக் கொண்டு

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அமுலில் உள்ளதால், நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக்கட்சி வெற்றியீட்டினாலும், அதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. இதனை அறிந்துதான் ஜே. ஆர் ஜெயவர்த்தனா, தாம் ஆக்கிய அரசமைப்பை மாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்ற தடைக்கல்லைப் போட்டுச் சென்றார்!

ஆகையால், நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கி, நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லக்கூடிய பிரதமரையே நாட்டின் தலைவராக்கும் பழைய ''வெஸ்ட் மினிஸ்ரர்'' முறையைக் கொண்டு வருவது இலகுவானதல்ல.

இந்தத் தடைக் கல்லை உடைத்தெறிவதற்கு, பழைய உத்தியைக் கையாள்வது குறித்து சுதந்திரக் கட்சியின் மேலிடம் ஆலோசித்துள்ளதாகக் கொழும்பில் ஒரு வதந்தி. அதாவது பொதுத் தேர்தலில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெல்லும் பட்சத்தில், நாடாளுமன்றத்தையே தேசியப் பேரவையாக மாற்றி, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது [illegible] புதிய அரசமைப்பை உருவாக்குவது குறித்து, ஆலோசிக்கப்பட்டுள்ளதாம். அவ்வாறு புதிய அரசமைப்பை உருவாக்கும்போது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் சந்திரிகா செயற்படுவார் என்று வதந்தி பரவியுள்ளது. அந்த வதந்தியை கவ்விப் பிடித்துக் கொண்டு கூட்டணியினர் மீண்டும் மோசம் போகப் பாரக்கின்றனர்!

உண்மையில், அதனை ஒரு பற்றுக் கோடாக வைத்துக் கொண்டு, நாடாளுமன்றம் செல்வதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் அவ்வாறான சூழ்நிலை எதுவும் உருவாக மாட்டாது என்றே கொழும்பில் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன, இது நிற்க.

தேர்தல் தில்லுமுல்லுகளை செய்து ஐ. தே. கட்சி பதவிக்கு வந்தால் போர் தீவிரமாகும். அரசியல் தீர்வு சமாதானம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அது எல்லோருக்கும் தெரிந்ததே!

காத்திருக்கும் போர்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தாலும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தப் போவதில்லை. இராணுவத்தினர் அதற்கு அனுமதிக்க மாட்டார்கள். ''விடுதலைப் புலிகளை வென்று காட்டுகிறோம்; அவர்களைப் பல வீனப்படுத்தி விடுகிறோம். அதன் பின்னர் பேசுங்கள்'' — என்று ஐ. தே க. அரசிடம் கூறியதையே தெரிவித்துத் தமது முடிவை ஏற்க நிர்ப்பந்திப்பார்கள்.

எனவே பொதுத் தேர்தலின் பின்னர் யார் ஆட்சிக்கு வந்தாலும், வடக்கு — கிழக்கில் பெரிய யுத்தம் ஒன்று காத்திருக்கிறது என்றே பலரும் நம்புகிறார்கள்.

உதயகாந்தன்

இத்தகைய சூழ்நிலையில் நாடாளுமன்றம் போகத்துடிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் எதனைச் சாதிக்க முடியும்? கொழுத்த சம்பளத்துடன் சுகபோகம் அனுபவிப்பதைத் தவிர!

பாதுகாப்பும் மன நிம்மதியும் இன்றி வாழும்] தமிழர்களை வாக்களிக்குமாறு கேட்கும் பல தமிழ் அரசியல் ''அணி'' களும் ஒன்றை மட்டும் நிச்சயமாகச் சாதிக்கலாம். அவை தமக்குள் பிரிந்து நிற்பதால், எம். பிக்களாக வரும் தமிழர்களின் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைந்து விடும் என்பதே அந்தச் சாதனையாகும்!

★ ★ ★

அவசரகாலச் சட்டம்

தொடர்ந்து ஐந்து வருடகாலமாக நடைமுறையில் இருந்த அவசரகாலச் சட்டத்தை அரசு காலாவதியாக விட்டுவிட்டது.

இவ்வாறு செய்வது சரியல்ல. அது பல பாதிப்புகளைக் கொண்டுவரும். நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டி அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து அமுலுக்குக் கொண்டு வர வேண்டும்— என்று பிரதமர் உட்பட சில அமைச்சர்கள் வாதிட்டனராம். ஆனால் ஜனாதிபதி தனது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

காரணம்— அவசர காலச் சட்டத்தின் கீழ் தேர்தல் நடைபெறுவது அவமானம் என்று அவர் கருதுகிறாராம். தனது நிர்வாகத்தில் பலவீனம் இருப்பதாக வெளி உலகம் கருதும் என்பதும் அவரது வாதம்.

ஆனால் அவசர காலச் சட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்காக, கலைத்த நாடாளுமன்றத்தைக் கூட்டினால், அது வேறு விதமாக அமைந்துவிடும் என்பதே உண்மை நிலை என்று அவதானிகள் கூறுகிறார்கள் (அருகில் ஆசிரியர் தலையங்கத்தில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.)

எது எப்படியோ, அவசர காலச்சட்டம் நீங்கிப் போய் விட்டதால் தமிழருக்கு] எதிரான யுத்தம், பொருளாதாரத் தடை எதிலும் மாற்றம் இருக்காது!

அவசரகாலச் சட்டத்தின் தேவை இல்லாமலே, சாதாரண உத்தரவுடனேயே அவை முன்னரைப்போலத் திணிக்கப்பட உள்ளன. தமிழர்களின் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட உள்ளன.

இதன் தாற்பரியம் என்ன? தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு சட்ட வசதி தேவையில்லை. அது சாதாரண நிர்வாக நடவடிக்கை. இனிமேல் அதுவே இயல்பு நிலை (Normaley) என்று அரசு தமிழர்களுக்கு உணர்த்துகிறது!

இறுமாப்பு நிலை

சிங்களவர்கள் தாமே இயற்றிய சொந்தச் சட்டத்தை மீறியும், தமிழர்களின் உரிமைகளைப் பறிப்பார்கள். எவரும் எதுவும் செய்ய முடியாது. தமிழர்கள் அடிமைகள். நாம் அவர்களை எதுவும் செய்வோம். அரசமைப்பு சட்டங்கள், ஒழுங்கு விதிகள் என்பன அவர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கோ பாதுகாப்பு அளிப்பதற்கோ அல்ல. அவை சிங்களவர் நலன் கருதியே ஆக்கப்பட்டவை — என்ற இறுமாப்பான நிலையையே இந்தப் புதிய நிலைப்பாடு எடுத்தியம்புகிறது!

வடக்கில் வாக்காளர்கள் வாக்களிக்காமலே தேர்தலை நடத்த முடியும் என்றால், அவசரகாலச் சட்டம் இல்லாமல் பொருளாதாரத் தடை ஏன் விதிக்க முடியாது?— என்று கேட்கிறார் விஜேதுங்கா! தமிழர் சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் சட்டங்களை தாம் நினைத்தவாறு வளைத்தெடுக்கும் அதிகாரம் உண்டு அவர்களுக்கு! தமிழர்களே! உங்களுக்கு உரிமை வேண்டுமென்றால் நீங்களே ஒரு நாட்டை உருவாக்குங்கள். சட்டங்களை இயற்றுங்கள், உங்கள் நலன்களைப் பேணுங்கள் என்று சொல்லாமற் சொல்கிறார் விஜேதுங்கா! இதனை சிந்தையிற்கொண்டு செயற்பட வேண்டியவர்கள் தமிழர்கள்— தமிழ் மக்கள்.

★

இன்று

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது. யாழ். பிரதேச செயலாளர் திரு. க. குணராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். விழாவை யொட்டி இன்று காலை 7 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஐ-30)

★ ★ ★

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனியாண்டவர் தேவஸ்தானத்தினர் ஏற்பாட்டில் நடக்கும் பொது அறிவுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கும்—

கவிதைப் போட்டிகள் இன்று பிற்பகல் 4 மணிக்கும் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறும்; சாவகச்சேரி வணிகர் மன்றமும், சாவகச்சேரி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கமும் இந்தப் போட்டிகளுக்கு ஆதரவு வழங்கியுள்ளன. (ஐ-31)

திருநெல்வேலியில் வயல் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 17

திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9-30 முதல் நண்பகல் 12-15வரை வயல் விழாவும் விவசாய ஆராய்ச்சி பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளும் விவசாய வல்லுனர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் விவசாயத் துறையினரும் கலந்து கொள்வார்கள். (ஊ)

விவசாய நூல்

''ஒருங்கிணைந்த பசளைப் பிரயோக முகாமைத்துவம்'' என்ற விவசாய நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் விவசாயிகளுக்கு மட்டுமல்லாது, விவசாய உத்தியோகத்தர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்தரத்தக்கது என்று தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் வன்முறைகள் தொடர்ந்தால்

சோவியத் யூனியனைப் போன்று இந்தியாவும் சிதறுண்டு போகும்

தேர்தல் ஆணையாளர் சேஷன் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 17

தேர்தல் முறைகேடுகள் தொடரின் இன்னும் பத்து ஆண்டுகளில் இந்தியா, முன்னாள் சோவியத் யூனியன் போன்று, உடைந்து சிதறும்; இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் என். சேஷன் முன்கண்டவாறு எச்சரித்தார்.

சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது: லஞ்சம் எல்லா இடங்களிலும் இருக்கிறது. தேர்தல் காலத்தில் இது அதிகமாக இருக்கிறது.

பாடசாலைகளில் இன்று வரலாறு, புவியியல் அசோக மன்னன் கிணறு தோண்டினார், மரம் நட்டார் என்று தான் போதிக்கப்படுகிறது.

பணத்துக்காக இன்று வாக்குகள் அளிக்கப்படுகின்றன. வாக்குப்பெட்டி கடத்தப்படுகிறது வாக்களிப்பு நிலையம் முற்றுகை செய்யப்படுகிறது. வாக்களிப்பு நிலையங்களில் பணிபுரிபவர்களே உள்ளுக்குள் இருந்தே வாக்குகளைப் போட்டு விடுகிறார்கள் இந்த நிலை நீடிப்பின் சோவியத் யூனியன் உடைந்து சிதறிப் போன கதிதான் இந்தியாவுக்கும் ஏற்படும் — என்றும் சேஷன் சொன்னார். (இ-எ)

வெற்றியீட்டியதும்

பொ. ஐ. மு. தாக்குதல்களை நடத்தும் என பிரசாரம்

சந்திரிகா கண்டிக்கிறார்

கொழும்பு, ஜூலை 17

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டுவது நிச்சயம் என்றும்—

அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களைத் தாக்குவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்கள் இப்பொழுதிருந்தே தயாராகி வருகின்றனர் என்றும்--

ஆளுங்கட்சியில் உள்ள சில குழுக்கள் பிரசாரம் செய்து வருவதில் உண்மை இல்லை அத்தகைய பிரசாரங்கள் கண்டிக்கத்தக்கவை.

— சுதந்திரக் கட்சிப் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைதியான சூழ்நிலையில் தேர்தலை நடத்த அனைவரும் உதவவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-எ-6)

நீரிழிவை கண்டு பிடிக்க கண் பரிசோதனை!

சென்னை, ஜூலை 17

நீரிழிவு நோயைக் கண்டுபிடிக்க இனி நாம் சிரமப்பட வேண்டியதே இல்லை. ஒருவருடைய கண்ணைப் பார்த்தே நீரிழிவு நோய் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதை கண்டுபிடிக்கலாம்.

இதற்காக ஒரு புதிய கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கதிர்களால் இயங்கும் இந்தக் கருவியைக் கொண்டு கண்ணை ஆராய்ந்தால் குளுக்கோஸ் எந்த அளவுக்கு உடலில் இருக்கிறது என்பதை இலகுவில் கண்டுபிடித்து விடலாம்.

இதைக் கொண்டு இரத்தத்திலுள்ள குளுக்கோஸ் அளவையும் தெரிந்து கொள்ளலாம்.

இரத்தத்தை பரிசோதித்து தெரிந்து கொள்ளும் பழைய முறை இனி தேவைப்படாது. (இ-4)

போட்டி போட்டு பாண் விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 17

யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும், தனியார் பேக்கரிகளும் போட்டி போட்டு பொதுமக்களுக்கு பாணை விற்பனை செய்து வருகின்றன.

தனியார் பேக்கரிகளில் முன்னர் 8 ரூபாவாக விற்கப்பட்ட பாண் மாவின் விலைக் குறைப்பை அடுத்து 7 ரூபா 50 சதமாக சென்ற வெள்ளிக்கிழமை முதல் குறைக்கப்பட்டது.

இதனை அடுத்து யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தால் 7 ரூபா 50 சதமாக விற்கப்பட்ட பாண் தற்போது 7 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. (இ-4)

பாராட்டு விழா

தமிழ் வித்துவான் கோண்டாவில் பி. கணேசனை கௌரவிக்கும் பாராட்டு விழா கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் கோவில் முன்றலில் நாளை (திங்கள்) மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

சர்வதேச கூட்டுறவாளர் விழா போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவை முன்னிட்டு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்பட்டு வரும் போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை அங்கத்தவர்களுக்கான கிராமிய நடனம், குழுப்பாடல் போட்டியும்

எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை அங்கத்தவர்களுக்கான நாடகப் போட்டியும் யாழ் மத்திய கல்லூரியில் காலை 9 மணி முதல் நடைபெறும். (ஒ-4)

401 தேர்தல் முறைப்பாடுகள்

நேற்று முன்தினம் மாலை வரை 401 தேர்தல் முறைப்பாடுகள் பொலிஸ் தலைமையகத்துக்கு கிடைத்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

தமிழ்ப் பிரதேசத்தில்

சமூக - பொருளாதார ஆபத்தை உருவாக்க ஸ்ரீலங்கா அரசு முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 17

வாழ்க்கைக்குரிய அடிப்படையான சமூக உணவுத் தேவைகளை இறுக்குவதன் மூலம் தமிழர் பிரதேசத்தில் சமூக கலாசார ஆபத்தொன்றை உருவாக்கிவிட ஸ்ரீலங்கா அரசு முயற்சிக்கிறது.

பொருளாதாரத் தடையை தமிழர் மீது விதித்துள்ள ஸ்ரீலங்கா அரசு தமிழர் பிரதேசத்தில் பொருளாதார விருத்தியில் ஆபத்தை உண்டு பண்ணவும் முயற்சிக்கிறது.

உளவியல் பாதிப்புகளையும் சமூக விழுமியங்களில் ஆபத்துகளை உருவாக்குவதுமே ஸ்ரீலங்கா அரசின் போர் உபாயமாக உள்ளது.

கல்விக்கு முதன்மை கொடுக்கும் தமிழர் சமூக விழுமியத்தை அழிப்பதே ஸ்ரீலங்கா அரசின் பிரதான போர் உபாயமாக உள்ளது.

இது சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் அண்மையில் மருத்துவ ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

அம்மருத்துவ ஆய்வறிக்கையில் ஸ்ரீலங்கா அரசின் பரீட்சைகள் ஒழுங்கற்றவையாக உள்ளதும் —

பாடசாலைகளின் ஏனைய கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் போர் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளதும் —

தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படும் பிரதான அழுத்தங்களாக உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் இடம்பெயர்வதால் பாடசாலைகள் தொடர்ச்சியாக மாறுகின்றமை, பாடசாலைகள் முகாம்கள் ஆக்கப்பட்டுள்ளமை, தேசிய பரீட்சை ஒழுங்காக நடத்தப்படாமை, அமைதியின்மை, பாதுகாப்பின்மை போதிய ஒளிவசதியின்மை, போக்குவரத்து வசதியின்மை, ஸ்ரீலங்கா இராணுவத்தால் மாணவர்கள் கைது செய்யப்படுதல், சித்திரவதை செய்யப்படுதல், சுட்டுக் கொல்லப்படுதல் ஆகியனவே தமிழர் பிரதேசத்தில் மாணவர்கள் பொதுவாக எதிர்நோக்கும் பிரச்சினைகளாக உள்ளன என்றும் அந்த மருத்துவ ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

ஆலயங்களில்

மட்டுவில் சந்திரபுரம் அருள்மிகு காளிகோவில் ஆடிப்பிறப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது

★ ★ ★

மீசாலை மேற்கு முத்துமாரி அம்மன் கோவில் ஆடிப்பிறப்பு விழா இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்ச்சிகளும் அங்கு இடம் பெறும். (ஐ-31

இலவசமாக சூட்டடுப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 17

வட மராட்சி கோட்டம் அல்வாய் பகுதியிலுள்ள இடம்பெயர்ந்தோருக்கான 15 குடிசைகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினர் இலவசமாக இரட்டைச் சூட்டடுப்புகளைக் கட்டி கொடுத்துள்ளனர்.

யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் கரும்புலிகள் நினைவாக அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ள இடம்பெயர்ந்தோருக்கான குடிசைகளிலேயே இவ்வாறு இரட்டைச் சூட்டடுப்புகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. (ஒ)

யாழ், தேர்தலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு கொள்ள வேண்டும் என்று இலங்கை மனித உரிமைக்குழு ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தி உள்ளது.

இது தாமதம் செய்யக் கூடிய அம்சம் இல்லை என்பதால் விஜேதுங்கா உடனடியாகவே உயர் நீதிமன்றத்துடன் தொடர்பு கொள்ள வேண்டுமென அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (அ-4)

கோட்டைப் பகுதியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளைப் பொருள்களைப் பொறுக்கி விற்று தனது குடும்பத்தைப் பராமரித்து வந்தார் என்றும் —

சம்பவதினம் உருண்டையான பித்தளைப் பொருள் ஒன்றை யாழ். கோட்டை முனியப்பர் கோவிலுக்கும், கோட்டை தாக்குமேடைக்கும் இடையில் கண்டெடுத்து அதனை கழற்ற முற்பட்டார் என்றும் —

அப்போது அப்பொருள் பெரிய சத்தத்துடன் வெடித்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

1991 இல் தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது காலஞ்சென்றவரின் தந்தை செல்லத்துரை இரத்தினசிங்கம் இராணுவப்பிடிக்குள் சிக்கிக் கொண்டார்.

தாயாரும் இவரது 5 சகோதரர்களும் பெரும் கஷ்டத்தின் மத்தியில் சீவியத்தை நடத்தி வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

நல்லூரில் கம்பன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம்பன் உருவப்பட ஊர்வலத்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். மூதறிஞர் கௌரவிப்பு, மார யாழ். விருது வழங்கல், பரிசளிப்பு ''அவலிகை'' நூல் வெளியீடு ஆடல் வேள்வி போன்ற நிகழ்வுகள் அன்று இடம்பெறும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளாக முற்பகலில் ஆய்வரங்கும், பிற்பகலில் பட்டிமண்டபமும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் காலை நிகழ்ச்சியாக செந்தமிழ் நாடாளுமன்றமும், மாலையில் கம்பன் இசையமுது வழக்காடு மன்றம் என்பனவும் நடைபெறும்.

சுழலும் சொற்போர், இளைஞர் அரங்கு, தேர்வு நேர்காணற் கவியரங்கு ஆகிய நிகழ்ச்சிகள் நான்காம் நாள் இடம் பெறவுள்ளன;

இறுதி நாளான ஐந்தாம் நாள் காலை நிகழ்ச்சியாக ஐயம் தெளி அரங்கும், மாலை நிகழ்ச்சிகளாக உருவப்படத் திரை நீக்கம், இலக்கிய ஆணைக்குழு வில்லிசை என்பனவும் இடம் பெறும் (ஐ)

தேவை
நகைக் கடைக்கு பங்காளர் தேவை
முதலீடு செய்யக் கூடியவராகவும், வியாபாரத்தை சேர்ந்து நடத்தக் கூடியவராகவும் இருந்தால் நன்று. நகைக்கடை யாழ். நகர் மத்திய முக்கியத்துவமான இடத்தில் சகல வசதிகளுடன் அமைந்துள்ளது.
விண்ணப்பிக்கவும்
விளம்பர இல:- 671
உதயன்,
யாழ்ப்பாணம்
(31967)

ஆற்றலைத் தேடி...
"நாடக அரங்கக் கல்லூரி"
புதிதாகத் தயாரிக்கவிருக்கும்
இரு நாடகங்களிலும்
அதனைத் தொடர்ந்து நடத்தவிருக்கும்
கற்கை நெறியிலும்
பங்கு கொள்ள விரும்புவோர் தங்கள் சுயவிபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 25 — 07 — 1994
தொடர்பு முகவரி
இணைப்பாளர்
19, பழம்றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (31969)

A/L 96
PURE/ APP
Mr. P. கமலசிங்கம்
B sc. (HONS)
ஆரம்பம்
23 - 7 - 94
சனி, ஞாயிறு
12 00 — 2 00 பி. ப.
CHEMISTRY—
MR. மகேஸ்வரன்
B.sc. (HONS)
PHYSICS—
MR மோகன் B sc
SHAMROCK
யாழ் சுண்டுக்குளி
(31964)

மரண அறிவித்தல்

தூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

மயிலிட்டி சந்தியோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது குராவத்தையில் வசிப்பவருமாகிய தூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை காலமானார்.

அன்னார் மேரி லூர்து (இராசம்மா) என்பவரின் அன்புக் கணவரும் மரியகொறற்றி, மேரி எமல்டா றோஸ், அன்ரன் ஜெயராசா, யோசேப் பீற்றர், மேரி றெஜினா, ஜேசுதாஸ், மரியராணி, யஸ்ரின், அமலதாஸ், ஸ்ரீபன் மரியதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பற்றிக், திருச்செல்வகுமார், உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (1994-07-17) பிற்பகல் 3. 00 மணிக்கு ஏழாலை சேமக்காலையில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஏ. யே பீற்றர்
(மகன்)

தற்போதைய முகவரி;
விழிசிட்டி (சாம் திணைவாயம் முன்பாக)
ஏழாலை தெற்கு
(7273)

மிக விரைவில்.......
★ தமிழோசை ☆ இது எங்கள் தேசம் ★ தாயகக்கனவு
போன்ற வெற்றிப் படைப்புக்களைத் தந்த
பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு
இன்னும் ஒரு நாடு
(சி-8751)
தயாரிப்பு: முல்லை. மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது